இ - ள். முகில்க ணிறைந்த மதில் சூழ்ந்த தஞ்சைவாணன் வெற்பி லுள்ளவனே! நஞ்சுபொருந்திய பாம்புகள் திரியப்பட்ட காட்டில் இடையாமத்தில் அச்சமின்றிச் செங்கையிலேந்திய வேலே விளக்காக அணங்கு போல்வாள் காரணமாக வாரற்க; அன்றி நீ குறியிடத்தில் வருதற் கிடையீடாகிய கொடுமையையுடைய நாடிகொட்டித்திரியும் நகர்க்காவலர் துஞ்சார்; அவர் துஞ்சினுந்தலைவி குறியிடத்தில்வருதற் கிடையீடாகிய கடுஞ்சொல்லை யுடைய அன்னை துஞ்சாளாதலால் நீ வரைந்துகொள்வாயாக. எ - று.

எனவே,— வெளிப்படையாக வரைவு கூறியவா றுணர்க. நடுநாள் - இடையாமம். அயில் - வேல். (உ௪௪)

காம மிக வுரைத்தல்.

காமமிகவுரைத்தல் எ - து. தலைவி வேட்கை மிகவாயின துரைத்தல்.

தென்னாக வண்டமிழ் வாணன்றென் மாறைச் செருந்தியுடன்
புன்னாக முங்கமழ் பூந்துறை வாசுரர் போற்றமிர்தம்
பின்னாக முன்வந்த பேதைதன் காமப் பெருங்கடற்கு
நின்னாக மன்றியுண் டோபுணை யாவது நீந்துதற்கே.

இ - ள். பொதியமலையிற் பிறந்த வளவிய தமிழைக்கற்ற வாணன் தென்மாறை நாட்டிற் செருந்திப்பூவுடன் புன்னாகப்பூவுங் கமழப்பட்ட துறைவனே! சுரர்போற்றப்பட்ட அமுதம் பின்வர முன்னே தோன்றிய எங்கள் தலைவியாசையாகிய பெரிய கடலை நீந்துதற்கு மரக்கலமாவது நின் மார்பன்றி வேறுண்டோ. எ - று.

தென்னாகம் - பொதியமலை. வண்டமிழ் - வளவிய தமிழ். 'பூ' என்பதனைச் 'செருந்தி'யுடனும் 'புன்னாகத்'துடனுங் கூட்டுக. சுரர்-தேவர். பேதை-திருமகள். எனவே,—தலைமகளைத் திருமகளாகக் கூறினார். ஆகம்-மார்பு. புணை - மரக்கலம். செருந்திப்பூவும் புன்னாகப்பூவுங் கூடி மணக்குந் துறைவனே யென்று கூறியவதனால், நீங்க ளிருவீரும் மணத்தொடு கூடியிருப்பீரென உள்ளுறையுவமந் தோன்றியவா றுணர்க. (உ௪௫)

கனவு நலி புரைத்தல்.

கனவுநலி புரைத்தல் எ-து. தலைவிக்குக்கனவினால்வந்த துன்பத்தைப் பாங்கி தலைவற் குரைத்தல்.

மாறாத தெவ்வென்ற வாணன்றென் மாறை வளநகர்போல்
பூணாக மெல்லியற் புல்லினை யாகவப் பொய்யை மெய்யாப்

பேணா மகிழ்ந்து பெருந்துயி லேற்றவள் பின்னை நின்னைக்
காணாள் கலங்கின ளாற்கலங் காமனக் காவலனே.

இ - ள். கலங்காத மனத்தையுடைய காவலனே! மாட்சிமை யகலாத பகைவரைவென்ற வாணன் தென்மாறை வளநகரைப்போன்ற பூண்பொருந்திய மார்பையுடைய மெல்லிய கனவினிடைத்தழுவினையாக, அந்தப் பொய்யை மெய்யாக விரும்பி மகிழ்ச்சியை யடைந்து பெரிய துயிலை யுற்றவள் துயிலுணர்ந்த பின்பு நின்னைக் காணாளாய்க் கலங்கினள். எ - று.

மாணாத - மாட்சிமையில்லாத. தெவ்வு - பகை; ஆகுபெயர். பூணாகம் - பூண்பொருந்திய மார்பு. மெல்லியல் - தலைவி. பேணி - விரும்பி. பேணா-செய்யா என்னும் வினையெச்சம். ஆல் - அசை. 'பெருந்துயிலேற்றவள்' என்றதனாற் கனவு வருவிக்கப்பட்டது. (உசசு)

கவினழி புரைந்தல்.

கவினழி புரைத்தல் எ - து. தலைவி அக மகிழ்ந்ததனைத் தலைவற்குக் கூறுதல்.

ஏரோற்ற கொங்கை யிளங்கொடி மாந்தளி ரேய்ந்தவண்ணம்
காரோற்ற கங்குலிற் பீரலர் போன்றது காவியுண்கண்
வாரோற்ற பைங்கழல் வாணன்றென் மாறையில் வாவியின்கண்
நீரோற்ற செங்கழு நீர்மலர் போன்றது நின்பொருட்டே.

இ - ள். தலைவனே! நின்பொருட் டழகு நிறைந்த கொங்கையையுடைய இளங்கொடி போன்றவளது மாந்தளிர்க் கொப்பாகிய அழகு கருமை நிறைந்த இராக்காலப் பீர்க்கம்பூப் போன்றது; கருங் குவளை போன்ற உண்கண் வார்கோத்துக்கட்டிய பைம்பொன்னாற்செய்த வீரக் கழல் புனைந்த வாணன் தென்மாறை நாட்டிலுள்ள வாவியிடத்துச் செங் கழுநீர் மலரில் நீர் நிறைய முகந்துகொண்ட மலர்போன்றது. எ - று.

ஏர் - அழகு. ஏய்தல் - ஒத்தல். வண்ணம் - அழகு. கார் - கருமை. பீர் - பீர்க்கு. அலர் - பூங்காவி, கருங்குவளை. வார் - கயிறு. கழல் -வீரத் தால் விருதாகக் காலிற் கட்டுவதோர் ஆபரண விசேடம். கருங்குவளை போன்ற கண் அழுதழுது சிவந்து நீர்கோத்த வதனால் நீர் முகந்த செங்கழுநீர்போன்ற தென்று கூறினார். (உசஎ)

வினவிய செவிலிக்கு 'மறைத்தமை விளம்பல்' முதலாகப் 'பிறர்வரைவுணர்த்தல்' ஈறாகக்கூறியஐந்தும்மறுத்தற்குரியன. 'உரவோன் நாடுமூருங் குலனு மரபும்புகழும் வாய்மையுங்கூறல்' ஒன்றுங் கழறற்குரித்து. 'வரைவெதிர்வுணர்த்தலும், வரையுநா ளுணர்த்தலும், அறிவறி வுறுத்தலும், ஆறு

பார்த்துற்ற வச்சங்கூறலும், ஆற்றுத்தன்மை யாற்றக்கூறலும், காவன் மிக வுரைத்தலும், காமமிக வுரைத்தலும், கனவின்லிபுரைத்தலும், கவினழி புரைத்தலும்" ஆகியஒன்பதும் எய்துதற்குரியன. இவை எல்லாங் குறிப்பி னானும் வெளிப்படையானும் வரைவு கடாவியவா றுணர்க.

வரைவுகடாதல்
முற்றும்.

ஒருவழித் தணத்தல்.

அஃதாவது, கூறிய பாங்கியொடு வரைதற் குடன்பட்ட தலைவன் தன்னூர்க்கொரு வழிபோய் வருகிறேனென்று போதல்.

‡ "செலவறி வுறுத்தல் செலவுடன் படாமை
செலவுடன் படுத்தல் செலவுடன் படுதல்
சென்றுழிக் கலங்கல் தேற்றியாற் றுவித்தல்
வந்துழி நேர்ந்துரை யெனவெழு வகைத்தே
ஒன்றக் கூறிய வொருவழித் தணத்தல்".— என்னுஞ் சூத்திர விதியால் ஒருவழித் தணத்தல் எழுவகைப்படும்.

தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றல்.
(இது வெளிப்படை.) அகற்சி - பிரிவு.

திரைகே தகைமணங் கூடுமெம் பாடியிற் சென்றுவந்தியான்
வரைகேன் வருந்துனை வல்லியை நீதஞ்சை வாணன்செவ்வேல்
புரைகேழ் மதர்விழிக் கோங்கரும் பேர்முலைப் பூசல்வண்டு
நிரைகேச வஞ்சியஞ் சேலென்று தேற்றுத னின்கடனே.

இ - ள். தஞ்சைவாணனது செவ்வேலையொக்கும் நிறம் பொருந்திய மதர்த்த விழியையும் கோங்கரும்புபோன்ற முலையையும் ஆரவாரிக்கும் வண்டு நிரையாயிருக்குங் கேசத்தையுமுடைய வஞ்சிபோன்றவளே! திரை யானது தாழம்பூ மணத்தைக் கூட்டும் எம்மூரில் யான் சென்று வந்து வரைவென வருமளவும் நீ வல்லியை யஞ்சலென்று தேற்றுதல் நின் கடன். எ - று.

திரை - அலை. கேதகை - தாழை. பாடி - ஊர். கேழ் - நிறம். மதர் விழி - மதர்த்த விழி. பூசல் - ஆரவாரம். கேசம் - அளகம். கடன் - முறைமை. (உசஅ)

---

‡ அகப்பொருள் விளக்கம், களவியல், சூ. ருக.

பாங்கி விலக்கல்.

(இது வெளிப்படை.)

பறந்தாங் கிவர்புரித் தேர்கட வேலுன் பதியடைந்தால்.
மறந்தாங் கமையவும் வல்லையன் பாதஞ்சை வாணனொன்னார்
நிறந்தாங் கிவர்கணை போலுண்கண் மாமுகி னீர்மைகொண்டு
புறந்தாழ் கருங்குழல் வெண்முத்த வாணகைப் பொன்னினையே.

இ - ள், அன்பனே! நின்னூர்க்குப்போய்ச் சேர்ந்தை யானால் தஞ்சைவாணன் ஒன்னார் மார்புதாங்க வெறுங்கணையையொக்கும் உன் கண்ணையும், முகிலினது தன்மையைக் கொண்டு புறத்திலே தாழப்பட்ட கருங் குழலையும், வெண்முத்தைப்போன்ற ஒளிபொருந்திய நகையையு முடைய பொன்னை யொப்பாளை மறந்து அவ்விடத்தி லிருக்கவும் வல்லையாதலால், பறந்தாற்போற் செல்லும் பரிபூண்ட தேரைச் செலுத்தா தொழிவாயாக. எ - று.

ஆங்கு - உவம வுருபு. இவர்தல் - செலுத்தல். கடவுதல் - செலுத்துதல். ஆங்கு - அவ்விடம். அமைதல் - அமைந்திருத்தல். நிறம்-மார்பு. இவர்தல் - ஏறுதல். வாள் - ஒளி. பொன்-ஆகுபெயர். (௨௪௯)

தலைவ னீங்கல் வேண்டல்.

தலைவ னீங்கல் வேண்டல் எ - து. தலைவன் பாங்கியுடன்படுத்தி நீங்கற் பொருட்டு வேண்டிக்கூறல்.

அறையும் பொறையு மணந்தவெங் கானத் தணங்கையில்வைத்
திறையும் பிரிவதற் கெண்ணுகி லேனெண்ண லார்வரைமேல்
மறையும் படிவென்ற சந்திர வாணன்றென் மாறையில்வண்
டுறையுங் குழலிசென் றேவரல் வேண்டுமெம் மூரகத்தே.

இ - ள். பகைவர் மலைமேல் மறைந்தொழியும்படி வென்ற தஞ்சைவாணன் தென்மாறை நாட்டி லிருக்கின்ற வண்டுறையுங் குழலி! அணங்கை இவ்விடத்து வைத்து, அறையும் பொறையுங் கூடிய வெவ்விய காட்டகத்து இறைப்பொழுதும் பிரிவதற் கெண்ணுகிலேன்; எண்ணிய தென்னெனில் ஓர் காரியத்தால் எம்மூரகத்துப் போய்வரல்வேண்டும். எ - று.

அறை - கற்குகை. பொறை - துறுகல். மணத்தல் - கூடுதல். இறை - ஆகுபெயர். எண்ணலார் - பகைவர். வரை - மலை. மலர் மணங்கொள்ளுங் காரணத்தால் வண்டுறைவதெனக் கொள்க. (௨௫௦)

தலைவனைப் பாங்கி விடுத்தல்.

தலைவனைப் பாங்கி விடுத்தல் எ - து. பாங்கி தலைவனை யூர்க்குப் போய்வருகவென விடுத்தல்.

இல்லத் துறையு மிவள்பொருட் டானுமக் கியானுமொன்று
சொல்லத் தவிர்கிலன் சூழ்கழ லீர்சுடர் தோய்புரிசை
வல்லத் தமர்வென்ற வாணன்றென் மாறையில் வந்துவந்து
செல்லத் திருவுளம் வைத்தகல் வீர்நுந் திருநகர்க்கே.

இ - ள். அணிந்த கழலையுடையீர்! இல்லிருக்கு மிவள்பொருட்டால் நமக்கு யானும் ஒரு சொற்சொல்லத் தவிராது, சொல்லவேண்டிய தாதலாற் சொல்கின்றேன் ; கதிரோனைத் தீண்டும் மதில் சூழ்ந்த வல்லமென் னும் நகரில் அமரை வென்ற வாணன் தென்மாறையில் வந்து வந்து போகத் திருவுள்ளம் வைத்து உம்முடைய திருநகர்க்குச் செல்லுவீர்.எ-று.

முல்லையுரிப் பொரு ளிருத்தல், 'இல்லத் துறையும்' என்று கூறியது. சூழ்தல் - அணிதல். சுடர் - கதிரோன். புரிசை - மதில். வல்லம் - ஓரூர். வந்துவந்து என்பது - வினைவின்கண் வந்த அடுக்கு. (உடுக)

பாங்கி தலைவிக் கவன்செல வுணர்த்தல்.

(இது வெளிப்படை.)

நிலவேய் தாள நிரைத்தன்ன வாணகை நீலநிறக்
குலவேய் நிகர்பொற் றொடிநெடுந் தோளி குறுகிவரச்
செலவே கருதினர் செந்தமிழ் வாணன் செழுங்கமலத்
தலவே தியன்பெறு நாள்பெற்று வாழ்பவன் றஞ்சையிலே.

இ - ள். நிலவுபொருந்திய முத்தங்களை நிரைத்தாலொத்த ஒளிபொருந்திய நகையினையும், நீலநிறத்தையுடைய விசேடமாகிய வேய்க்கு நிகராகிய பொற்றொடி யணிந்த நெடிய தோயுமுடையாய்! நம் அன்பராயினர் செழுங்கமலத்தை இடமாகவுடைய பிரமன் பெறும் வாழ்நாளைப் பெற்று வாழ்பவனாகிய செந்தமிழ் வாணனது தஞ்சையிற் கடுகிவரச் செலவே கருதினர். எ - று.

நிலவு - ஒளி. எய்தல் - பொருந்துதல். தாளம் - முத்தம். வேதியன் - பிரமன். பிரமன் பெறுநாள் சதுர்யுக மிரண்டாயிரம் வட்டந் திருப்பின் ஒருநாள்; அந்தநாட்கணக்கில் ஆண்டு நூறென்றுணர்க. (உடுஉ)

தலைவி நெஞ்சோடு புலத்தல்.

(இது வெளிப்படை.) புலத்தல் - நேர்ந்து கூறல்.

குளித்தா ரிளங்கொங்கை யாவியி லாவி குளிர்ப்பநம்மை
யளித்தா ரளித்த கலத்தணைத் தாரன் றணங்கின்முன்னே
தெளித்தார் செழுந்தஞ்சை வாணனொன் னாரினஞ் சிந்தையை
ஒளித்தா ரவரிங்ங னேநன்று நன்றிவ் வுலகியலே.

இ - ள். அன்பராயினார் இளங்கொங்கையாகிய வாவியிற் குளித்தார், விரகக்கனலால் வெதும்பிய நம்மாவி குளிர்ச்சியையடைய நம்மை யளித்தார், அளித்து மார்பிடத் தணைத் தகன்றார், இயற்கைப் புணர்ச்சி கூடிய அன்று அணங்கின் முன்னே பிரியேனென்று தெளியச்செய்தார், செழுமையையுடைய தஞ்சைவாணனுக் கொன்னாரைப்போல நம்முடைய சிந்தையை வொளித்தார், அவரிவ்விடத் திவ்வுலகியல் நன்று நன்று. எ - று.

தலைவன்மேற்குறையை உலகின்மேல் வைத்துக் கூறினாள். 'நன்று நன்று' என்பது குறிப்புமொழி. ஆவி - வாவி. ஆவி - உயிர். தெளித்தல் - தெளியச் சொல்லுதல். ஒன்னார் - பகைவர். இன் - உவமப்பொருட்கண் வந்தது. (௨௫)

சென்றோ னீடலிற் காமமிக்க கழிபடர்கிளவி.

சென்றோ * * * கழிபடர் கிளவி எ - து. தலைவன் மாலைக்காலமளவும் வாராது வரவு நீடித்தலாற் காம மிகுந்த வதனால் மிகுந்த நினைவொடு கூடிய சொல்.

மயிலாடு தண்டலை மாறைவ ரோதயன் வாணனொன்னார்க்
கெயிலா கியகடற் கானலஞ் சேர்ப்பற் கிடையிருள்யான்
துயிலா நிலையொன்றுஞ் சொல்லாய் துணையுடன் சூழ்திரைத்தேன்
பயிலா மலரணை மேற்றுயி லாநிற்றி பாலன்னமே.

இ - ள். வெண்மை நிறம்பொருந்திய அன்னமே! மயிலாடப்பட்ட சோலை சூழ்ந்த மாறைநாட்டின் வரோதயனாகிய வாணன் பகைவர்க் கரணாயிருக்கப்பட்ட கடற்கழிக் கரையையுடைய சேர்ப்பற் கிடையிருளில் யான் துயிலா நிலையொன்றுஞ் சொல்லாய்; நீயோ துணைபிரியாமல் திரை சூழத்தக்கதாகத் தேன் செறிந்த அம்மலரணைமேல் துயிலா நின்றாய்; இது நினக்குத் தகாது. எ - று.

'துணையுடன் திரைசூழ் மலரணைமேல் துயிலா நிற்றி' எனவே, தான் அலவயின்றி யிருக்கின்றேனென்று கூறியவா றுணர்க.

தனியே ஐந்தலை யரவு தீண்டியதே யொத்த பொல்லாத துன்பத்தை யொறுத்து என்னைப்போல நீர் எவ்வாறிருந்தீர்;இருந்தவகையைச்சொல்ல வேண்டும். எ - று.

ஐவாயரவு - ஐந்தலைநாகம். இன்னா இடர் - ஐம்புலனால் வரும் பொல்லாத துன்பம். யான் இத்துன்ப மனுபவித் திருந்தே னென்பது தோன்ற 'என்போல்' என்றார். எவ்வணை - ஒளிவணை. மருவலர் - அடையாதவர். அலர் - பழி. ஒருதனி - ஒப்பற்றதனி. (உகூஅ)

தலைவியை யாற்றுவித்திருந்த அருமை கூறல்.

(இது வெளிப்படை.)

இவளா ருயிர்புரக் தியானிருந் தேன்செக்க ரிந்துவன்னப்
பவளா டவியிற் பயினித் திலம்பங்க யங்குவியத்
தவளா தவஞ்சொரி தண்டுறை வாதஞ்சை வாணன்றெவ்வின்
துவளாம லாற்றுவி யென்றன்று நீசொன்ன சொன்னினைந்தே.

இ - ள். செக்கர்வானத்துத் தோன்றிய பிறையைப்போலப் பவளக்காட்டில் நெருங்கிய நித்திலம் தாமரை குவிய வெள்ளைக்கிரணஞ் சொரியப்பட்ட தண்டுறைவனே! தஞ்சைவாணன் பகையைப்போலத் தலைவி மனந்துவளாமல் ஆற்றுவியென்று நீபிரிந்து போங்காற் சொன்ன சொல்லை நினைந்து இவள் அரிய வுயிரை நீங்காமல் யான் காத்திருந்தேன். எ - று.

புரத்தல் - காத்தல். செக்கர் - செம்மாலை. இந்து - பிறை. நித்திலம் - முத்து. தவளாதவம் - வெண்கிரணம். (உகூகூ)

இவற்றுள், 'தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றலும், பாங்கிதலைவிக் கவன்செல வுணர்த்தலும்' ஆகிய இரண்டும் செலவறிவுறுத்தற் குரியன. 'தலைமகளைப் பாங்கி விலக்கல்' ஒன்றும் செலவுடன்படாமைக்குரித்து. 'நீங்கல் வேண்டல்' செலவுடன் படுத்தற் குரித்து. 'பாங்கியடுத்தல்' செலவுடன் படுதற்குரித்து. 'தலைமகன் நெஞ்சொடு புலத்தலும், காமமிக்க கழிபடர் கிளவியும்' ஆகிய இரண்டுஞ் சென்றுழிக் கலங்கற்குரியன-'தலைமகளை யாற்றுவித்தலும், தலைமகன் வந்தமை தலைமகட்குணர்த்தலும்'ஆகிய இரண்டுந் தேற்றியாற்றுவித்தற் குரியன. 'பாங்கிவந்தோன் றன்னொடு நேர்ந்து வினுதல்' முதல் மூன்றும் வந்துழி நேர்ந்துரைத்தற்குரியனவெனக் கொள்க.

ஒருவழித் தணத்தல்

முற்றும்.

அஃதாவது,—வரைவை இடையிலெனவைத்து வரைதற்கு வேண்டும்பொருள் காரணமாகப் பிரிதல்.

தலைவன் வரைதற்குப் பொருட்காரணமாகப்பிரிந்தானெனின்பொருளிலனாயிற்று. ஆகவே, பொருவிறந்தானென்பதனோடு மாறுகொள்ளுமெனின் மாறுகொள்ளாது. பழங்கிடையாய்க் கிடைக்குஞ் செம்பொருள் பலவுளவேனும் அதனையெடுத்து நுகர்வோன்சிறியனாதலானும், ஆள்வினையுடைய னல்லனெனப் படுதலானும், இவன் தன் னூக்கத்தா லீட்டிய பொருளைப் பலவாற்றானும் நுகர்தல் உத்தம விலக்கணமென்று கருதிப் பொருள்வயிற் பிரிந்தானென் றுணர்க.

*"பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலக்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றொருமையிற் கூறிய வொன்பது வகைத்தே
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவே."— என்னுஞ்

சூத்திர விதியால் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலொன்பது வகைப்படும்.

என்பொருட் பிரிவுணர்த் தேத்திழைக் கென்றல்.

(இது வெளிப்படை.)

கழைபோல் வளர்நெற் கவின்பெற வாரி கவர்ந்துவரும்
மழைபோல் வருகுவன் வன்சுரம் போய்த்தஞ்சை வாணன்வெற்பி
லிழைபோ லிடையாண் முலைவிலைக் காவன யாவையுங்கொண் [டு
உழைபோ லரிநெடுங் கண்மயி லேசென் றுணர்த்திதுவே.

இ - ள். மான்போன்ற செவ்வரிபரந்து நீண்ட கண்ணையுடைய மயில் போன்றவளே! வலிய சுரத்திடைப்போய்த் தஞ்சைவாணன் வெற்பிலிருக்கும் நூல்போன்ற இடையாள் முலைவிலைக் காகவேண்டிய பொருள்களெல்லாங்கொண்டு கரும்புபோல் வளரப்பட்ட நெல் அழகுபெற நீர் கவர்ந்துகொண்டுவரும் முகில்போல் யான் வருவல், நீ தலைவி பக்கற் போய்ப்பிரிவைச் சொல்வாயாக. எ - று.

எனவே,— தலைவி நெற்பயிராகத் தான் முகிலாகவும், பொருள் நீராகவும், அப்பொருள்களைக் கண்டு தலைவி மகிழ்ச்சியாற் கரும்புபோல் வளர்வதாகவும் உள்ளுறையுவமங் கொள்ளக் கிடந்தவாறு காண்க.

யான் என்றது தோன்றா வெழுவாய். கழை - கரும்பு. கவின் - அழகு. வாரி - நீர். கவர்தல் - வாங்கல். மழை - முகில். சுரம் - வழி. இழை - நூல். உழை - மான். அரி - செவ்வரி. மயில் - நிறப்புருவகம்.

---

* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. ௨௫.

நின்பொருட் பிரிவுரை நீயவட்கென்றல்.

(இது வெளிப்படை.)

வசையும் புகழுநின் மேலன வாந்தஞ்சை வாணன்வெற்பா
மிசையுங் கரும்பினில் வேம்புவைத் தாலன்ன வேட்கையெல்லாத்
திசையும் பரவுந் திருவனை யாடன் றிருவுளத்துக்
கிசையும் படிவல்லை யேற்சொல்லி நீபின் னெழுந்தருளே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பனே! வசைவரினும் புகழ்வரினும் நின் பக்கலாம்; நின்பொருள்வேட்கை நுகரும் கரும்பிற்கைக்கும்வேம்பை வைத்தாலொக்கும்; எல்லாத் திசையி லுள்ளோருந் துதிக்குந் திருவையொப்பாள் தன் திருவுள்ளத்திற்குப் பொருந்தும்படி சொல்லவல்லையேல், சொல்லி நீ பின்னெழுந் தருள்வாயாக. எ - று.

வசை - இகழ்ந்து கூறப்படுஞ்சொல். புகழ் - புகழ்ந்து கூறப்படுஞ் சொல். மிசைதல் - நுகர்தல். இசைதல் - பொருந்துதல். (உகூக)

நீடேனென் றவனீங்கல்.

நீடேனென் றவனீங்கல் எ - து. தலைவ னீட்டித்திராது விரைந்து வருவலென்று பாங்கியொடு கூறி நீங்குதல்.

காலைப் பொழுது கடும்பரித் தேர்பண்ணிக் கானகம்போய்
மாலைப் பொழுது வருகுவல் யான்றஞ்சை வாணனன்னாட்
டாலைப் பழன மணிந்தவெம் மூர்நும் மகங்குளிரச்
சோலைப் பயில்குயில் போன்மொழி யாயென் றுணிவிதுவே.

இ - ள். சோலையிடத்துப்பழகுங்குயில்போல்மொழியாய்! கதிரோன் உதிக்குங்காலத்திற்கடுகிச்செல்லும்பரியையுடையதேரைப்பண்ணமைத்துத் தஞ்சைவாணன் நாட்டிடத்துக் கரும்பு வளர்ந்தெழுந்த வயல் சூழ்ந்த எம்மூர்க்குக் கானகங் கடந்துபோய், நும் அகங்குளிரக் கதிரோன் மறையு மாலைக்காலத்தில் யான் வருகுவல், என்மனத்தின்கண் துணிவிது. எ - று.

தேர் பண்ணல்-தேர்செலுத்தற்குரியன வெல்லாம்அமையச்செய்தல். ஆலைப்பழனம் - கருப்பம்வயல். கடும்பரி - கடுகிச்செல்லும்பரி. "காலைப் பொழுது கடும்பரித் தேர்பண்ணிக் கானகம்போய் - மாலைப் பொழுதில் வருகுவல் யான்" எனில் "வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிவோரிருதுவின் கண்ணுடைத் தென்மனார் புலவர்." என்னுஞ் சூத்திரத் தொடு மாறுகொள்ளுமே யெனின் அற்றன்று; காலைப் பொழுதிற்போய் மாலைப் பொழுதில் வருகுவனெனப் பாங்கி கருதத் தன்கருத்தில் வருஞான்று மாலைப்பொழுதில்வருவதாயெண்ணித் தலைவன் கூறியவாறென்க.

இக் கருத்தானே யன்றே, தலைவன் மீண்டு வருங்கால் 'பாகனொடு சொல்லல்' என்னுங் கிளவிச்செய்யுளில் "சென்மாலையர்திகண்டால் தரியா ளென் றிருந்தனையே" எனக் கூறிய தூஉமெனக் கொள்க.

பாங்கி தலைவிக் கவன்சேல வுணர்த்தல்.

(இது வெளிப்படை.)

வில்லேய் குறும்பு மிறும்புமெவ் வாயும் விராயுவெவ்வாய்க்
கல்லேய் கவலைக் கடங்கடக் தார்நமர் காய்க்தெதிர்க்தார்
செல்லேய் முரசச் செருவென்ற வாணன்றென் மாறையினின்
வல்லேய் முலைவிலை தான்றந்து நாளை மணம்பெறவே.

இ - ள். சினத் தெதிர்ந்தார் இடிக் கொப்பான பல்லிய முழக்கும் போரைவென்ற வாணன் தென்மாறை நாட்டில் நினது வல்லுக் கொப்பான முலை விலைதந்து நாளை மணம்பெற வேண்டுமென்பது கருதி, நம்மன்பர் விற்கள் சாத்தி யிருக்கின்ற குறும்புஞ் சிறு மலைகளும் எவ்விடமுங் கலந்து நடப்போர் கால்களை யறுக்கும் வெவ்விய வாய்களையுடைய கற்களும் பொருந்திய கவர்வழியையுடைய காட்டைக் கடந்தார். எ - று.

குறும்பு - பாலைநிலத்து வேடரிருக்கு மூர். இறும்பு - சிறுமலை. கவலை - கவர்வழி. கடம் - காடு. செல் - இடி. வல்லு - சூது. (௨௬௩)

பூங்குழை யிரங்கல்.

பூங்குழையிரங்கல் எ - து. தலைமகளிரங்கல்.

இப்பே ருவகை யினிப்பிரி யேனென்று மென்முன்சொன்ன
அப்பே ருரைபழு தாமென்ன வேயர வஞ்சுமந்த
மைப்பே ரலைகடல் வையகந் தாங்கிய வாணன்றஞ்சைச்
செப்பே ரிளங்கொங்கை மங்கைசெப் பாதன்பர் சென்றதுவே.

இ - ள். பாம்பாயிரந் தலையாற் சுமக்கப்பட்ட நீலநிறப் பெரிய அலைகடல் சூழ்ந்த புவிப்பாரத்தைத் தாங்கிய வாணனது தஞ்சையி லிருக்குங் கடைந்த செப்புப்போன்ற இளங்கொங்கையையுடைய 'நங்காய்! அன்பர் என்னுடன் சொல்லாது சென்றது இயற்கைப்புணர்ச்சியிற் கூடியஞான்று இப் பெரிய மகிழ்ச்சியை இனிப் பிரியேனென்று என்முன் சொன்ன அப் பெரிய சொல் பிரிவலென்று சொல்லிற் பழுதாமென்றோ.

இவ்வாறு தலைவனை அசதியாடுதல்போல் கூறிய வுரையை மறந்தானென்று குறிப்புத்தோன்ற இரங்கிக் கூறினளென்க. உவகை - மகிழ்ச்சி. உம்மை - அசைநிலை. மங்கை - அண்மைவிளி. (௨௬௪)

பாங்கிகொடுஞ்சொற்சொல்லல்.

பாங்கி கொடுஞ் சொற்சொல்லல் எ - து. இவ்வாறு நீயிரங்குவ தென்னையென்று கழறிக்கூறல்.

ஆரணத் தானருள் பாரளித் தானடங் காதவரை
வாரணத் தால்வென்ற வாணன்றென் மாறை வயங்கொளிசேர்
பூரணத் தார்மதி போன்முகத் தாயென் புலம்புதிநின்
காரணத் தாலல்லவோபிரிந் தாரின்று காதலரே.

இ - ள். பிரமனாலுண்டாகிய நிலவுலகத்தைக் காத்துப் பகைவரை யானைப்படையால் வென்ற சந்திரவாணன் தென்மாறை நாட்டில்விளங்கிய ஒளிசேர்ந்த பூரணைத்திதியினாலே நிறைந்தமதி போன்ற முகத்தாய்! ஏன் புலம்புகின்றாய்; நின்னை மணம்புணர் காரணத்தாலல்லவோ காதலரின்று பிரிந்தார். எ - று.

ஆரணத்தான் - பிரமன். பூரணை - பூரணைத்திதி. (௨௬௫)

தலைவிகொடுஞ்சொற்சொல்லல்.

தலைவிகொடுஞ்சொற் சொல்லல் எ-து. கழறிய பாங்கியை மனத்தினொந்து கூறல்.

மண்டுந் திரைவையை சூழ்தஞ்சை வாணற்கு வன்புலியும்
செண்டுங் கொடுத்தகல் செம்பியர் போலன்பர் சென்றுழிமுள்
இண்டுங் கழையும் பயிலும்வெங் கானியல் கேட்டுமிந்நோய்
கண்டுங் கலங்கல்செல் லாதிந்த வூரெற் கழறனன்றே.

இ - ள். திரைநெருங்கும் வைகை சூழ்ந்த தஞ்சைவாணனுக்கு வலிய புலிக்கொடியையுஞ் செண்டாயுதத்தையுங் கொடுத்தகலப்பட்ட சோழனைப்போல அன்பர் சென்றவிடத்தில் முள்பொருந்திய ஈகைச்செடியும் மூங்கிலும் நெருங்கும் வெவ்வியகாட்டினிலக்கணத்தைக்கேட்டும்யான் துயருழக்கும்வேட்கை நோயைக்கண்டு மனத்திடத்துக் கலக்கஞ் செல்லாது இந்த வூரென்னைக்கழறுதல் நன்றே. எ - று.

பாங்கிகழறியவதனை வூரின்மேல்வைத்துக்கூறியது.

வாணனுக்கு வன்புலியுஞ் செண்டுங் கொடுத்தகல்செம்பியர்போலத் தலைவன்சென்றானென்று தலைவனுக்கு இகழ்ச்சிதோன்றியதெனின், தலைவனூர் விட்டுக்கானிடைச் சென்றதற்கு உவமை கூறியதல்லது பதிகொடுத்தற்கு உவமை கூறியதன்றாதலான் இகழ்ச்சிதோன்றாதென்றுணர்க.

மண்டுதல் - நெருங்குதல். புலியும் - செண்டும் - ஆகுபெயர். செம்பியர்-சோழர். இண்டு - ஈகை. கழை - மூங்கில். (௨௬௬)

வருதுவர்மீண்டெனப் பாங்கிவலித்தல்.

வருகுவர்மீண்டெனப் பாங்கிவலித்தல் எ-து. பாங்கி, தலைவர்மீண்டு வருவரெனக்கூறுதல். வலித்தல் - கூறுதல்.

தேர்த்தானை வாணன்றென் மாறைமின் னேயஞ்சல் செம்புருக்கி
வார்த்தா லனைய வழிநெடும் பாலை மடப்பெடைகோய்
பார்த்தா தவந்தணி பாதவ மின்மையிற் பைஞ்சிறகால்
போர்த்தா லு மஞ்ஞைகண் டும்போவ ரோகம் புரவலரே.

இ - ள். தேர்ப்படையையுடையவாணன்தென்மாறைநாட்டிலிருக்கு மின்னே! அஞ்சலை; செம்பையுருக்கி வார்த்தாலொத்த வெப்பத்தைத் தருகின்ற வழி நெடிதாகிய பாலைநிலத்து மடப்பத்தொடு கூடிய பெடை மயிலினது வெயிலானாகிய துன்பத்தைப் பார்த்து, அவ்வெயிற்றணிக்கின்ற மரங்களில்லாமையால், தனது பசியசிறகினாலே போர்த்து ஆகவும் மயில் கண்டு நம்புரவலர் போவரோ! மீண்டுவருவரோ! எ - று.

எனவே,-தலைவன் ஏகுங்கால் சுரத்து நிகழுந்தன்மை பாங்கியறிந்தவா றென்னையெனின், தலைவன்செல்லுங்கால் சுரம் இத்தன்மையவென்று சொல்லியவாற்றால் அறிந் திருந்தாளாகலின், இவ்வாறு கூறினாளென்க.

இவ்வாறு சொல்லியதை ‡ "அரிதாயவறனெய்தி" என்னும் கலித் தொகையானுமுணர்க.

தானை - படை. ஆதவம் - வெயில். பாதவம் - மரம். ஓகாரம் - எதிர் மறை. (உ௬௭)

பருவங்கண்டுபெருமகள் புலம்பல்.

பருவங்கண்டு பெருமகள்புலம்பல் எ-து. தலைவன்பிரியுங்கால் கார்க்கு முன்னேவருவலென்று குறிப்பாற்கூறிப் போயினனாகையால் கார்ப்பருவங் கண்டு தலைமகள்புலம்பிக் கூறுதல்.

குறிப்பாற் கூறியதெங்ஙனமெனின் "நீடேனென்றவனீங்கல்" செய்யுளில் 'மாலைப்பொழுதுவருகுவல்யான்' என்றது மாலைக்குறித்தாகியபொழுது கார்காலமென்று குறிப்பானறிவித்தவாறுணர்க. அக்குறிப்பறிந்து பாங்கி தலைவிக்குக் கூறியவதனால் தலைவி கார்கண்டு புலம்பினாளென்பது. அன்றியும், மேற்கிளவி இருளைவம்பாகத்தோன்றியது தலைவன் கூறிய கார்ப்பருவமன்றெனப் பொருள் கொள்ளக்கிடந்தன யாவுங் குறிப்பாற் கூறியதென்றுணர்க.

---

‡ கலித்தொகை, பாலைக்கலி, செ. ௧௦.

மிகவும் பரந்த கரியகண் ணீர்செங்கை வெள்வளைபோல்
உகவுந் துறந்தவ ருன்னல ராலுறை கார்பொழிய
மகவுந் துணையுங் கலைதழு வுந்தஞ்சை வாணன்வெற்பின்
அகவும் பெடைமயி லுந்தமி யேனெங்ங னாற்றுவலே.

இ - ள். சிவந்த கையினிடத்துச் சங்கவளையுகுந்ததுபோலமிகவும்விரிவாகிய கரியகண்ணினீர் துளித்துளியாயுதிரவுந் துறந்ததலைவர் நினைந்திலர், ஆதலால், காரானது துளிகளைப்பெய்ய மழைத் துன்பத்தாலஞ்சி மகவும் துணையும் முசுக்கலையைத்தழுவும் தஞ்சைவாணன் வெற்பிற் பெடைமயிலும் மகவுந்தனியாயிருக்கப்பட்ட யான் எங்ஙன மாற்றியிருப்பேன்! எ-று.

'செங்கைவெள்வளைபோல மிகவும்பரந்த' எனக்கூட்டுக. உகுத்தல் - உதிர்தல். உன்னலர் - நினைந்திலர். உறை - துளி. கார் - முகில். துணை - பெண்குரங்கு. கலை-முசுக்கலை.

* "கலையென்காட்சி யுழைக்கு முரித்தே." "நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்." என்னுஞ் சூத்திரங்களால் கலை முசுவின் ஆண்பெயரென்றுகொள்க. பெடைமயில் என்புழி உம்மைத்தொகை. (உசுஅ)

இகுளை வம்பென்றல்.

இகுளைவம்பென்றல். எ-து. அவ்வாறு புலம்பியதலைவி தேறும் வண்ணம் பாங்கி இது காலத்தின்வந்த மேகமன்று, இடையே வம்பாகத்தோன்றியதென்றுகூறியது. வம்பு-காலமல்லாதகாலத்திற் றோன்றும் பொருள்.

தனஞ்சேர்ந்த வஞ்சிநின் சாயல்கண் டஞ்சித் தனித்தனிபோய்
வனஞ்சேர்ந் தயர்ந்த மயில்களெல் லாந்தஞ்சை வாணன்வெற்பில்
கனஞ்சேர்ந் தலர்துளி காலுமுன் னேவம்பு காலுமென்று
இனஞ்சேர்ந் தகவின நாந்தனி வாடி யிருத்தல்கண்டே.

இ - ள். திரண்டதனத்தையுடைய வஞ்சி! நினது சாயலைக்கண்டஞ்சி ஒன்றொடொன்று கூடாமல்தனித்தனியாய்ப் போய்க்காட்டிற் சேர்ந்தயர்ந்த மயில்களெல்லாம் தஞ்சைவாணன் வெற்பினிடத்துக் கார்காலம் வந்து மேகங்கள் கூடிப் பருத்த துளிகளையும் முன்னே வம்பாகமழையைப் பெய்யுமென்றெண்ணி, நாம் அன்பரைப் பிரிந்து, தனியாய் வாடியிருத்தலைக்கண்டு, கூட்டங் கூடி அகவாநின்றன; ஆதலால், இதுதலைவன் கூறிய காலத்தில் வருங்காரன்று. எ - று.

காரியத்தைக் காரணமாக வுபசரிக்கப்பட்டது. தனம்-முலை. சேர்தல்-திரட்சி; § "சேரே திரட்சி" என்னும் உரிச்சொல்லியற் சூத்திரத்தானு முணர்க.

---

*தொல். பொருள். மரபியல், சூ. சுரு-சுசு.

§ தொல். சொல். உரியியல், சூ. சுஎ.

அயர்தல் - இளைத்தல். அலர்தல் - பருத்தல். † "தண்கமழ்மலரிணர் சிதைய" என்னுந்திருமுருகாற்றுப்படையுட் கூறியதனானுணர்க. அன்றியும், ¶ "மலர் முலைப்பாங்கியருளியல்கிளத்தல்" என்னும் அகப்பொருட் சூத்திரத்தானுமுணர்க. (உகக)

இறைமகள்மறுத்தல்.

இறைமகள் மறுத்தல் எ - து. தலைவி பாங்கி கூறியவதனை மறுத்துக் கூறல்.

வாவித் தகையன்ன மேதஞ்சை வாணன் வரையகத்தென்
பாவித் தனிநெஞ்சு பார்த்தஞ்சு மேகண் பயின்றகண்ணார்
தூவித் தளைமயில் கோபங்கொள் ளாவரத் தோன்றியைச்சேர்ந்
தாவித் தகந்தள ரும்மணி காலு மராவென்னவே.

இ - ள். வாவியிலிருக்கும் அழகுபொருந்திய அன்னம்போல்வாய்! தஞ்சைவாணன் வரையிடத்து என்கண்பார்த்துப் பாவித்தனி நெஞ்சு அஞ்சாநிற்கும்; நெருங்கிய கண்களார்ந்த சிறகாகிய தளையையுடைய மயில் காந்தளை அரிய மணியையுமிழும் நாகமெனச் சினங்கொண்டு வரலல்லாமையினால் காந்தளைச்சேர்ந்து பெருமூச்செறிந்தன ஆதலால் வம்பன்று, காலத்தில் வந்தகாரிது. எ-று.

எனவே, - காந்தள்மலருங் காலங் கார்காலமென்பது தோன்றக்கூறினாளென்க. தகை - அழகு. அன்னம் - ஆகுபெயர். 'வரையகத்தென்கண்பார்த்து' எனவியையும். 'கண்பார்த்து' என்னும் வினையெச்சம் தன்வினையைக் கொண்டு முடியாது 'நெஞ்சஞ்சும்' எனப்பிறவாற்றான்முடிந்தது என்னையெனின், "உரற்கால் யானை யொடித்துண்டெஞ்சி யவிர் நிமற்றுஞ்சிய செந்நாயேற்றை" என்றாற் போலுங் கொள்க.

தூவி - சிறகு. கோபம் - சினம். தோன்றி - காந்தள். ஆவித்தல் - பெருமூச்செறிதல். காந்தள் என்புழி இரண்டனுருபுதொகுத்தல். காலுதல் - உமிழ்தல். (உஎ)

அவர்தூதாகிவந்தடைந்ததிப்பொழுதெனத்துணைவிசாற்றல்.

அவர் தூதாகிவந்தடைந்ததிப்பொழுதெனத் துணைவிசாற்றல் எ - து. தலைவிகார்காலம் வந்ததென்று கூறிய சொற்கேட்ட பாங்கி தலைவன் தான் வருகின்ற செய்தியை யறிவித்தற்கு விடுப்ப இப்பொழுது இக்கார்தூதாய் வந்தடைந்ததென்று கூறல்.

---

† திருமுருகாற்றுப்படை, பழமுதிர்சோலை.

¶ இறையனார் அகப்பொருள், சூ. ௩.

இன்னே வருவர்நின் காதல ரேதில ரேங்கவினிக்
கொன்னே யிரங்கி வருந்தல்கண் டாய்கொற்ற நேமிவிந்தை
மன்னே யெனவந்த வாணன்றென் மாறை வரவுணர்த்த
முன்னே நடந்தன காண்கடுங் கால முகிலினமே.

இ-ள். அலர்தூற்றும் அயலாரேங்க நின்காதலர் இப்போதே வருவர்; இனி வீணேயிரங்கி வருந்தலை; வெற்றியாழியைப் புனைந்த சயமாதுக் கிறைவனெனவந்த வாணன்தென்மாறை நாட்டில் தலைவர் வரவுணர்த்த விரைவொடு கூடிய முகிலின் முன்னே நடந்து வந்தன காண்பாயாக. எ-று.

இன்னே - இப்போதே. ஏதிலர்-அயலார். கொன்னே - வீணே. கண்டாய் - முன்னிலையசை. கொற்றநேமிவிந்தை - சயமாது. மன்-இறைவன். முகிலினம் - முகிற் கூட்டம். (௨௭௧)

தலைமகளாற்றல்.

(இது வெளிப்படை.)

இன்புற்ற காலத் திருவர்க்கு மொன்றுயி ரென்றுசொன்னார்
அன்புற்ற காதல ராதலி னாலகன் றாரெனநாம்
துன்புற்ற காலத் தவருமுறா ரல்லர் தோழிசொல்லும்
வன்புற்ற காரளிக் குந்தஞ்சை வாணன்றென் மாறையிலே.

இ-ள். கார்போற் கொடுக்குந் தஞ்சைவாணன் தென்மாறை நாட்டில் தோழி சொல்லுஞ் சொல்லும் வற்புறுத்தலைப்பொருந்திய; அன்றியும், அன்புற்றகாதலர் தாம் இன்புற்றகாலத் திருவர்க்கும் உயிரொன்றென்று சொன்னார்; ஆதலால், மனம் பிரிந்தாரென்று நான் துன்பமுற்ற காலத்து அவரும் வாராரல்லர். எ-று.

எனவே,-வருவரென்பதாயிற்று. 'அன்புற்ற காதலரின்புற்றகாலத்து' எனவும் 'உயிரொன்று' எனவும் மாறுக. உறாரல்லர்-வாராரல்லர். வற்புறுத்தல்-ஆற்றுவித்தலைப்பொருந்தல். காரளிக்கும் என்பது உவமத்தொகை. ()

அவனவட்புலம்பல்.

அவனவட் புலம்பல். எ-து. பொருளீட்டச்சென்ற தலைவன் தன் கருமமுற்றியபின்றையே அவ்விடத்துத் தலைவியை நினைத்துப்புலம்பல்.

விழிகுழி யும்படி தேர்வழி பார்த்தனை வீழ்ந்துவண்டு
கொழுதிமி ருங்குழல் சோரக் கிடந்து குடங்கையின்மேல்
ஒழுகிய வஞ்சன வெள்ளத் துணங்கு மணங்கைமுன்சென்
றெழுகெனு நெஞ்சமென் னேயவ ரோவெனி லென்சொல்லுமே.

* [இது பிறசெய்யுட்கவி] (௨௭௩)

---

* அம்பிகாபதிக்கோவை, செ. ௨௮௨.

மீண்டுவருங்காலைப்பாகனொடுசொல்லல்.

(இது வெளிப்படை.)

வன்மா முடுக வலவநின் றேரினி வாணன்றஞ்சைக்
கென்னாசை நெஞ்சின் முன்செல லாகிள வேறுடல்விப்
பொன்மா மணியும் பிரிந்திருந் தாரும் புலம்புமன்றிற்
சென்மா லையந்தி கண்டாற் றரியாளென் றிருந்திழையே.

இ - ள். கழுத்திற்கட்டிய இரும்பிற் செய்தபெரிய மணியும், கணவரைப்பிரிந்த மாதரும் புலம்புறப் பசுவாயினது மழவிடையைச் சேர்ந்து மன்றத்திற் செல்லுமாலையாகிய அந்திக்காலத்தைக் கண்டால் என் திருந்திழையாற்றாள்; ஆதலால், பாகனே! வாணன் தஞ்சையூர்க்கு என்னாசை கொண்ட நெஞ்சு செல்வதற்கு முன்னே, இன்று இன்னியதேர்செல்லத் தேரிற்பூட்டிய வலியகுதிரைகளை முடுகச்செய். எ - று.

வல் - வலிமை; விரைவுமாம். குதிரைமுடுகச்செய்யென்பது செய்யுள் விகாரத்தாற்றொக்கது. வலவன் - தேர்ப்பாகன்; அண்மைவிளி. * ஏறு- "எருமையுமரையும் பெற்றமுநாகே" என்னும்மரபியற் சூத்திரவிதியானு முணர்க.

ஏறு - விடை. பொன்-இரும்பு.

‡ "வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்,
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று."—என்றார்பிறரும்.

"கங்கையார்தாங்குங்கானப்பெருங்கவலை
யெங்குமறவோரிரைத்தெழுந்தார் - திங்களைக்கண்
டென்றுகாண்வேட்கைமடிசுரப்பத்தோன்றுவ
கன்றுகாண்மெய்குளிர்மின்கண்டு."—என்றார்பிறரும்.

மாலையந்திமிசை என்பதுபோல் நின்றது. திருந்திழை - அன்மொழித்தொகை. (௨௭௪)

மேகத்தொடுசொல்லல்.

மேகத்தொடுசொல்லல். எ - து. தலைவன்வருங்காலத்து மேகத்தை நோக்கிச் சொல்லல்.

வேண்டும் பொருளைத் தரும்பொருட் போய்முற்றி மீண்டவென்
றூண்டும் பரிமுன் றுனைமுகில் காள்சென்று சொல்லுமிந்து [றேர்
தீண்டுங் கொடிமதில் சூழ்தஞ்சை வாணனைச் சேரலர்போல்
நீண்டும் பசலைமெய் போர்த்திருப் பார்தமக் கென்வரவே.

---

* தொல். பொருள். மரபியல், சூ. ௬௩.

‡ திருக்குறள், செ. ௯௩௧.

இ - ள். விரும்பப்பட்ட எப்பொருளையுங் கொடுக்கும்பொருட்டுப் போய்முடிவாகி மீண்ட எனது தேரிலே பாகன் செலுத்தும் பரிமுன்னாக விரைந்தோடும் முகில்காள்! அந்திங்களைத் தீண்டுங்கொடிகட்டிய மதில்சூழ்ந்த தஞ்சைவாணனைச் சேராதவர்போல் நெருக்கும் பசலைநிறம் மெய்யெங்கும் போர்த்திருப்பவர் தமக்கு எனதுவரவினைச் சென்று சொல்வீர். எ-று.

வேண்டல்-விரும்பல். 'பொருட்போய்' என்புழி நான்கனுருபு தொக்கது. முற்றல் - முடித்ல். தூண்டல் செலுத்தல். பரி - குதிரை. துனை - விரைவு, †"கதழ்வுந்துனைவும் விரைவின்பொருள." என்னும் சூத்திரவிதியானுணர்க. இந்து - திங்கள். சேரலர் - பகைவர். தீண்டல் - நெருங்குதல். சொல்லருந்துன்பத்தால் மெய்ந்நிறம் வேறுபட்டிருப்பராதலால், உவமை கூறியவாறுணர்க. (உஎரு)

பாங்கி வலம்புரிகேட்டு அவன் வரவறிவுறுத்தல்.

பாங்கி வலம்புரிகேட்டு அவன் வரவறிவுறுத்தல். எ - து. பாங்கி வலம்புரியோசையைக்கேட்டுத் தாய்அவன்வரவை யறிவுறுத்தல்.

பொருகின்ற செங்கயல் போல்விழி யாய்பண்டு போயநின்கைக்
குருகின் றணிந்திறை கொள்வது காண்கநங் கொண்கர்பொற்றேர்
தருகின்ற சங்கந் தருவன்ன வாணன் றமிழ்த்தஞ்சைவாய்
வருகின்ற தென்றுமுன் னேயோகை கூறும் வலம்புரியே.

இ-ள். ஒன்றோடொன் றெதிர்க்கின்ற செங்கயல்போலும்விழியாய்! முன்னாள் கழன்று போய நின்கைவளை இன்று புனைந்து தங்குவதழகு; நங்கொண்கர் எறிவரும் பொற்றேரானது தருகின்ற சங்கநிதியையுங் கற்பகத்தருவையுமொத்த வாணன் தமிழ்த்தஞ்சை வீதிவாய் வருகின்றதென்று முன்னேவலம்புரிச்சங்கமானது மகிழ்ச்சிகூற நின்றது, நீ கேட்பாயாக.

குருகு - வளை. இறைகொள்வது - தங்குவது. காண்க - அழகுதக. * 'நித்திலமுலையினார்தன்னெடுங்கணேக்கப்பெற்றும்-கைத்தலந்தீண்டப்பெற்றும் களிந்தனமலர்ந்த' என்னுஞ் சிந்தாமணிச்செய்யுளில்'காண்க'என்னுஞ்சொற்கு அழகுதக என்று நச்சினார்க்கினியர் கூறிய உரையானுமறிக. கொண்கர் - தலைவர், ஓகை - உவகை. (உஎசு)

---

† தொல். சொல். உரியியல், சூ. கசு.

* சிந்தாமணி, விமலையாரிலம்பகம், செ! ௬௨.

வலம்புரிக்கிழத்திவாழ்த்தல்.

(இது வெளிப்படை.)

மால்வண் டெனமன்னி வாணன் றென்மாறை மன்னன்புகழே
போல்வண் டமிழ்மன்னர் போற்ற விளங்குக பொன்கொழிக்குங்
கால்வண்டல் வையைக் கரைமல்கு மல்லிகைக் கான்முகையின்
மேல்வண் டிருந்தது போற்கரு மாமுக வெண்சங்கமே.

இ - ள். பொன்கொழிக்கும் வண்டல்பரந்த வாய்க்கால்பொருந்திய வையையாற்றங்கரையில் நிறையும் மல்லிகையினது காம்பொடுகூடிய முகையின்மேல் வண்டிருந்ததுபோலக் கரியமுகத்தொடுகூடிய பெரிய வெண்சங்கமானது திருமால்கைச் சங்கேபோல என்றும் அழியாமையாய் நிலைபெற்ற வண்மைபொருந்திய தமிழ்வேந்தராலே போற்றநின்ற வாணனாகிய தென்மாறைநாட்டுமன்னன் புகழ்போல்விளங்க. எ - று.

கால் - வாய்க்கால். வண்டல் - திரைபுரண்டிருகரையும் பரப்பிய மண். மல்குதல் - நிறைதல். காம்பு முகத்து மெழுகமைத்தலால் கருமுகமென்றது. மா - பெருமை. 'கருமுகமா வெண்சங்கம்' எனக் கூட்டுக. (உஎஎ)

தலைவன்வந்துழிப்பாங்கிநினைத்தமைவினவல்.

தலைவன் * * * வினவல் எ - து. வரைவிடைவைத்துப் பொருள் வயிற் பிரிந்தோன் பிரிந்த முப்பத்தைந்தாநாள் வந்தானென்று நாள் வரையறைகூறியதென்னையெனின், "களவொழுக்கமையிருதிங்கள்." என்று வரையறை கூறினமையானும், * "களவினுட்டவிர்ச்சி வரைவினீட்டம் திங்களிரண்டினகமென மொழிப." என்ற இறையனாரகப்பொருளுரையில் 'திங்களிரண்டினகம்' என்பதற்குத் திங்களிரண்டின்கண்ணென்றும், ஐந்து நாள் ஆறுநாள் அவர்வரைவு முடியுமென்றும் கூறினாராகலானும், 'ஒருவழித் தணத்தல்' என்பது வரைக்கும் இவ்வுரையில் பதினைந்து நாளென்று கூறுவதனாலும், வரைவியல் ஆறுநாள் மணமுடிந்ததாகக் கூறுதலானும், ஆக ஐம்பத்தாறுநாளென்று வரையறையாய் நிற்றலின், ஈண்டுமுப்பத்தைந்தாநாள் வரையறை கூறியதெனக்கொள்க.

"வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிவோர் இருதுவின்கண்ணுடைத்தென மனார்புலவர்" என்னுஞ்சூத்திரவிதியான் இருதிங்கள்சென்றதென்று கூறாது முப்பத்தைந்துநாள் சென்றதென்று கூறியதென்னையெனின், இருதிங்கள் சென்றதென்று வருவதல்லது இதற்குள்ளாகவருவதன்றென இலக்கணங் கூறிற்றிலர்; இருதுவின்கண்ணுடைத்தெனக் கூறுதலான், இவ்விருதுவிடை எவ்வளவு வரையறைப்பட்டதோ அவ்வளவே இலக்கணமெனக்கொள்க.

---

* இறையனார் அகப்பொருள், சூ. கூ.

அன்றி இருதிங்கள் சென்று வந்தானெனின் களவொழுக்க மூன்று திங்களாம்; ஆகவே, இலக்கணவழுவாய் அகப்பொருள் சிதைவாமெனக் கொள்க.

நினையீர் பொருட்குப் பிரிந்தய னாட்டுழி நின்றுழிமேவள்
அனையீர் நினைந்து மறிதிர்கொல் லோவஞ் சொலாலறிவோர்
வனையீ ரிதழ்க்கண்ணி வாணன்றென் மாறையை வாழ்த்தலர்போ
னனையீ ரிதழ்க்கண்ணவ காவெவ்வ நோயுற்ற நவ்வியையே. [ல்

இ - ள். வெள்வளையீர்! அழகியசொல்லாலே புலவர் புனையப்பட்ட சொல் ஓரிதழும், பொருள் ஓரிதழுமாகிய தமிழ்மாலையையுடைய வாணன் தென்மாறையை வாழ்த்தாதவர்போல், நீரால் நனைந்த இரண்டிதழையுடைய கண்ணுறங்காததுன்பந் தரப்பட்ட வேட்கை நோயையுற்ற மான் போன்றவளை நினையீர்; அப்பொருள் காரணமாகப் பிரிந்த நாட்டிடத்துத் தங்குமிடத்தில் நீர்நினைந்தும் அறிதிரோ? எ - று.

அறிவோர் - புலவர். வைகுதல் - தங்குதல். எவ்வம் - துன்பம். நோய் - வேட்கை. நவ்வி - மான்; இவ்விரண்டும் ஆகுபெயர். (௨௭௮)

தலைவனினைந்தமைசெப்பல்.

(இது வெளிப்படை.)

கானெடுங் குன்றங் கடந்துசென் றேனொரு காலுமைதோய்
மானெடுங் கண்ணி மறந்தறி யேன்வண்கை வாணன்றஞ்சை
நீனெடும் பெண்ணைக் குரும்பை யுஞ்சூது நெருங்குகொங்கைத்
தேனெடுங் கண்ணி மென்பூங் குழன்மாதர் திருமுகமே.

இ - ள். மைதோய்ந்த மான்போன்ற நெடியகண்ணையுடையாய்! வாணன்தஞ்சைநகரின்கண் நீலநிறமாகிய நெடியபனையினது குரும்பையும், சூதுமொப்பு நெருங்குங் கொங்கையையும், வண்டுறையும் நெடிய மாலையணிந்த மெல்லிய பொலிவினையுடைய மாதர் அழகிய முகத்தையும் காடும் கொடிய குன்றுங் கடந்து சென்றேனாகிய யான் ஒருகாலும் மறந்தறியேன்.

† "உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னொள்ளமர்க் கண்ணாள் குணம்".— என்பதனானறிக.

எனவே, - மறந்திலனாதலால் நினைந்திலன் என்று கூறியவாறாயிற்று.

'கானெடுங்குன்றம்' என்புழி உம்மைத்தொகை. நீலம் - நீல் எனக் கடைக்குறைத்தது; நீனிறவண்ணன் என்புழிப்போல. பெண்ணை - பனை. சூது - வல். தேன் - வண்டு. (௨௭௯)

---

† திருக்குறள் - செ. ௧௧௨௫.

ஆற்றுவித்திருந்த அருமைசாற்றல்.

ஆற்றுவித்திருந்த அருமைசாற்றல் எ-து. பாங்கி தலைவியையாற்றுவித்திருந்த அருமையைத் தலைவற்குக் கூறல்.

உயரா மலகத் தருங்கனி நீர்நசைக் குண்சுரம்போய்
வியராம லில்லின் விடுத்தகன் றுளைமென் பூஞ்சிலம்பா
அயராம லஞ்சலென் றாற்றுவித் தேனிவ் வவனியெல்லாம்
மயராமல் வந்தபி ரான்றஞ்சை வாணன்றென் மாறையிலே.

இ - ள். இப்புவியெல்லாம் மயங்காமல் வந்தபிரானாகிய தஞ்சைவாணனது தென்மாறைநாட்டின் மெல்லிய பூமலிந்த சிலம்பனே! உயர்ந்த நெல்லியின் கரிய கனியை நீர்வேட்கைக்குண்ணப்பட்ட சுரத்திடைஉடன்போய் வெயர்வடையாமல் இல்லின்கண்விடுத்து நீர் பிரிந்தவளை இளையாமல் அஞ்சலென்று ஆற்றுவித்தேன். எ - று.

ஆமலகம் - நெல்லிக்கனி. நீர் நசை - நீர்வேட்கை. வியராமல் - வியர்வடையாமல். அயராமல்-இளையாமல். மயராமல் - மயங்காமல்.

'என்பொருட் பிரிவுணர்த் தேர்திறைக் கென்றல்' பிரிவறிவுறுத்தற்குரியது. 'பாங்கிகின்பொருட் பிரிவுணா நீயவட்கென்றல்' பிரிவுடன்படாமைக்குரித்து. 'தலைமகன் நீடேனென்றல்' பிரிவுடன் படுத்தற்குரித்து. 'பாங்கிதலைவிக்கு அவன்செலவுணர்த்தல்' பிரிவுடன் படுதற்குரித்து. 'தலைமகளிரங்கலும்,' 'கொடுஞ்சொற்சொல்லலும்,' 'பருவங்கண்டு பெருமகள் புலம்பலும்,' 'மறுத்தலும்,' ஆகிய நான்கும் பிரிவுழிக்கலங்கற்குரிய. 'பாங்கி கொடுஞ்சொற்சொல்லலும்,' 'வருகுவர் மீண்டெனப் பாங்கிவலித்தலும்,' 'பருவமன்று வம்பென்றலும்', 'அவர் தூதாகிவந்தடைந்ததிப்பொழுதென்றலும்,' ஆகிய நான்கும் வன்புறைக்குரிய. 'தலைமகளாற்றல்' வன்பொறைக்குரித்து. தலைமகள் மீண்டுவருகாலை 'அவனவட்புலம்பலும்,' 'பாகனொடு சொல்லலும்' 'மேகத்தொடுசொல்லலும்', ஆகிய மூன்றும் வருவழிக்கலங்கற்குரிய. 'பாங்கி வலம்புரிகேட்டவன் வரவறிவுறுத்தல்' முதலைந்தும் வந்துழி மகிழ்ச்சிக்குரிய. (௨௮)

வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதல் முற்றும்.

முதலாவது களவியல் முற்றிற்று.

இரண்டாவது

வரைவியல்.

வரைவு எ - து. தலைமகன் தலைமகளைக் குரவர்முதலாயினோர் கொடுப்பவும் கொடாதொழியவும் வதுவைச் சடங்கொடுபொருந்தி மணஞ்செய்து கோடல். ஆதியிலெடுத்துக்கோடற்கண்ணே களவென்றும், கற்பென்றும் கைகோளிரண்டெனவைத்து அவ்விரண்டிக்கு நடுவேவரைவியலென்று கூறியதனால் முன்னதனோடு மாறுகொள்ளுமெனின் மாறுகொள்ளாது. என்னை,— கற்பிற்கு நிமித்தமாய வரைவு கூறுதலான் இதுவும் கற்பின் பாற்படும். ஆயின், இதனைக் கற்பின்பாற்படுத்துக் கூறாது வரைவியலெனவேறாகக் கூறியதென்னையெனின், வரைவுமுதலாக உடன்போக்கிடையிறாகப் பலவகைப்பட்டு ஒவ்வோர்வகைக்குக் கிளவிகளும் பலவாக அதிகாரப்பட்டுகிடத்தலின் விளங்குதற்கு வரைவியலெனவேறு கூறப்படும். என்னை,—புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சியாயினவாறுபோல, இல்வாழ்க்கையும் இல்வாழ்க்கை நிமித்தமுமாயவரைவும் கற்பெனப்படுமென்றுணர்க. * "வரைவு மலிவேயறத் தொடுநிலையென்-றுரையமையிரண்டும் வரைவிற் குரிய-கிளவித்தொகை யெனக் கிளத்தினர்புலவர்" — என்னுஞ் சூத்திரவிதியால் வரைவு மலிவு மறத்தொடு நிலையுமென இரண்டு வகைப்படும். அவற்றுள், வரைவுமலிவென்பது - வரைவுதொடங்கி நடக்குமுயற்சி மிகுதல். * "வரைவுமுயல் வுணர்த்தல் வரைவெதிர் வுணர்த்தல் வரைவறிந்து மகிழ்தல் பராவல் கண்டுவத்தலென் றொருநால் வகைத்தே வரைவுமலிதல்".— என்னுஞ் சூத்திரவிதியால் வரைவுமலிதல் நால்வகைப்படும்.

வரைவுமலிவு

காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கிகாதலிக் குணர்த்தல்

(இது வெளிப்படை.)

தொலைவிலை யாகிய பல்பொருள் காதலர் சூதமர்கின்
முலைவிலை யாக முகந்தளித் தார்முனை வேந்தர்தம்மைத்
தலைவிலை யாகத் திறைகொண்ட வாணன் றமிழ்த்தஞ்சைநீ
உலைவிலை யாகுக பொன்வண்ண மாறுக வொண்ணுதலே.

* அகப்பொருள்விளக்கம், வரைவியல், சூ. ௨, ௩.

இ - ள். ஒள்ளிய நுதலை யுடையாய்! காதலர் எடுக்க வெடுக்கத் தொலையாத பலவாகிய பொருள்களைச் சூதுபோற் பொருந்தும் நின் முலைவிலையாக வம்பன்ன அளவையான் முகந்தளித்தார்; பகைவேந்தர்தம்மை அவர்கள் தலையைக்கொள்ளாது விடுதற்கு அவர்கள் கொடுக்கும் பொன்னை விலையாகத் திறைகொண்ட வாணன் தமிழ்த்தஞ்சையிலிருக்கின்ற நீ வருத்தமில்லையாகுக, பசலைநிறத்தையொழிப்பாயாகுக. எ - று.

சூதுமுலை-உவமத்தொகை. அமர்தல்-பொருந்துதல். முலைவிலை-கோடற்குரியார் கொடுத்தற்குரியார்க்குக் கொடுக்கும்பொருள். முனை - பகை. திறை - கப்பம். உலைவு - வருத்தம். பொன்வண்ணம் - பசலை. (உஅக)

காதலிநற்றுயுள்ளமகிழ்ச்சியுள்ளல்.

காதலிநற்றுயுள்ளமகிழ்ச்சியுள்ளல் எ-து. தலைவன் விடுத்த முலைவிலைப் பொருள்களைக்கண்டு நமக்கு மணக்காலமென்று நற்றாய் மகிழுமுள்ளத்து மகிழ்ச்சியை நினைத்தல்.

கயமா மலரெனுங் கண்ணியை வண்டெனுங் காளைபல்புள்
இயமா மணம்புண ரீர்ந்துறை நாட ரெதிர்ந்தவர்மேல்
வயமா நடத்திய வாணன் றென்மாறை வருகுவரேல்
நயமா மணவணி கண்டியாயு மின்புறு நம்மினுமே.

இ - ள். குளத்திற்றாமரை மலரொன்னுங்கன்னியை வண்டென்னுங் காளை பலபுள்ளினோசையே முரசமாக மணம்புணரப்பட்ட குளிர்ந்த துறையையுடைய நாடர் எதிர்ந்த பகைவர்மேல் யானையைச்செலுத்திய வாணன் தென்மாறைநாட்டில் வருகுவாராகில், அவரது நன்மணக்கோலத்தைக் கண்டு நம்மினும் யாயுமின்புறும். எ - று.

மாமலர்-திருவிருக்குமலர். 'கயமாமலரென்னுங் கன்னியை வண்டெனுங்காளை பல்புள்-ளியமாமணம்புண ரீர்ந்துறைநாடர்' என்றதனால் குளமே குளமாகவும், குளத்திற்பூத்த தாமரைப்பூ தலைவியாகவும், தாமரை மலர்மணம் உண்ணவரும் வண்டு தலைவனாகவும், பலபுள்ளியமே வாத்தியமாகவும் உள்ளுறையுவமந் தோன்றியதெனின், இவ்வாறு தலைவன் மணமுடியாமல் உடன்போக்கு நிகழ்தலான் இறைச்சிப்பொருளொன்று கொள்க. இயம்-ஓசை. ஈர்ந்துறை. குளிர்ந்ததுறை. 'ஈர்ங்கைவிதிரார்' என்றாற்போலக் கொள்க. வயமா-யானை. மணவணி - மணக்கலம்; உம்மைசிறப்பு.

பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைவிக்குணர்த்தல்.

பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைவிக்குணர்த்தல் எ-து. பாங்கி தலைவன்தமர் மணங் கூறிவந்துழித் தலைவி தமர்மண மெதிர்ந்தமை தலைமகட்குக் கூறல்.

மணிப்பா விகைமுத்தம் வைத்தாங் கடம்பலர் வார்திணை தூய்
அணிப்பாய் துவலை யரும்புந் துறைவர்க் கணியெதிர்ந்து
பணிப்பா சிழையல்குல் வெண்ணகை யாய்நமர் பாரநின்னோய்
தணிப்பான் முரசறைந் தார்தஞ்சை வாணன் றமிழ்நிலத்தே.

இ - ள். பசிய பொன்னாற்செய்த மேகலைபணிந்த அல்குலையும் வெள்ளியநகையுமுடையாய்! தஞ்சைவாணன் தமிழ்நிலத்தின் மணிப்பாலிகையின் முத்தம்வைத்தாற்போல அடம்பமலரில்நெடியதிணை தூவப்பட்ட நிணையாய்ப் பரந்ததிவலை தோன்றுந் துறைவர் தமக்கு நமரணியால் மணமெதிர்ந்ததுபார், நின்வேட்கை நோய்தணிக்கும்பொருட்டு முரசறைந்தார்; அம்முரசொலிகேட்பாயாக. எ - று.

ஆங்கு-உவம உருபு. ‡'பலர்புகழ்ஞாயிறு கடற்கண்டாங்கு' என்புழிப்போல. வார்திணை - நெடியதிணை. தூய் - தூவி; ‡ 'உருவப்பல்பூத்தூய் வெருவர' என்புழிப்போல. துவலை - திவலை. அணியெதிர்ந்து என்புழி ஆம நமனொனவருவிக்க. பணி-பாம்பு. நோய்-வேட்கை. என்ஞான்றும்மணச்சடங்குபோற்றோன்றும் துறைவராதலால் இங்குவரவே மணச்சடங்குண்டாமென்பது தோன்றி நின்றது. (௨அ௩)

தலைமகளுவகையாற்ற துளத்தோடுகிளத்தல்.

தலைமகளுவகையாற்று துளத்தொடுகிளத்தல் எ - து. தலைவிமகிழ்ச்சியடங்காது நெஞ்சொடு கூறல்.

சோகா குலமெய்தல் காண்டுநெஞ் சேநந் துறைவனொனும்
நீகா னுடன்பள்ளி நீள்வங்க மேறி நிலம்புரக்கும்
மாகா விரியன்ன வாணன்றென் மாறைமன் னன்பகையும்
ஏகா விருட்கங்கு லாங்கடற் கானே யெனுங்கனாயே.

இ - ள். நெஞ்சே! நம்முடைய துறைவனொன்னும் மீகாமனும் படுக்கையாகிய மரக்கலமேறி நிலத்தைக்காக்கும் பெரிய காவிரிக்கொப்பாகிய வாணனாகிய தென்மாறை மன்னனுக்குப்பகையாகினும் ஏகுதற்கரிய.

---

‡ திருமுருகாற்றுப்படை, திருப்பரங்குன்றம்.

இருண்ட கங்குலாங் கடலைக்கடந்து காலையென்னுங் கரையைக் காண்குதும்; ஆதலால், நீ சோகத்தால் ஆகுலமெய்தலை. எ - று.

சம்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்னும் மாரன் அம்பால்வரும் அவத்தை ஐந்தனுள் சோகம் மரணத்தால்வரும் அவத்தையென்றுணர்க. ஆகுலம் - துன்பம். காண்டும் - எதிர்காலமுற்று வினைச்சொல். நீகான்-மீகாமன். பள்ளி - படுக்கை. வங்கம் - மரக்கலம் புரத்தல் - காத்தல். காலை - விடியற்காலம். பகையும் என்புழி உம்மை இழிவுசிறப்பு. இதனுள் இயை புருவகம் வந்தவாறுகாண்க. (உ௪௪)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

(இது வெளிப்படை.)

மாரியஞ் சுங்கொடை வாணன்றென் மாறையில் வாழிவண்டார்
வேரியந் தொங்கல் விரைகமழ் மார்ப விடாதவம்பல்
சேரியம் பொய்கைத் துறையலர் வாடநுஞ் செவ்விமணம்
தூரியஞ் சங்கதி ரக்காட்டு நீயன்று சூட்டலரே.

இ - ள். வண்டென்னுங் கள்பொருந்திய மாலை மணங்கமழு மார்பனே! மறந்துவிடாத வம்பலையுடைய சேரியாகிய பொய்கைத்துறையிலே தோன்றிய அலர்வாடல் நின்னழகாகிய மணக்கோலத்தாலன்று; சூட்டினை அலராயின்று பலருமறியத் தூரியமுஞ் சங்குமதிர நீ சூட்டிக்காட்டு; முகிலஞ்சுங் கொடையையுடைய வாணன் தென்மாறைநாட்டில் நெடுங்காலம் வாழ்வாயாக எ - று.

மாரி - முகில். அஞ்சும் என்னும் பெயரெச்சம் தன்வினைமுதலைக்கொண்டு முடியாது பிறவாற்றான் முடிந்தது. வாழி-முன்னிலை வினைமுற்றுச் சொல்.*"வாழிய என்னும் சேயென்கிளவி இறுதியகரங்கெடுதலு முரித்தே." என்பதனுன் வாழியென்பது நெடுங்காலமென்பதும் அவ்வுரையானுமுணர்க. ஆர்தல் - உண்டல். வேரி-கமழ். தொங்கல் - மாலை. விரை-மணம், மார்ப-அண்மைவிளி. அம்பல்-முகிழ முகிழ்த்தல். அலர்-வாய்திறந்து ஒருவர் ஒருவரை நோக்கித் தூற்றுஞ் சொல். செவ்வி - அழகு. மணம் - மணச்சடங்கு. தூரியம் - முரசம். அலர் - மாலை; ஆகுபெயர். (உ௪௫)

தலைவி மணம்பொருட்டாக வணங்கைப் பாங்கிலைகாட்டல்.

தலைவி மணம்பொருட்டாக வணங்கைப் பராகிலைகாட்டல் எ - து. தலைவிமணம் பொருட்டாகத் தெய்வத்துக்குச் சிறப்புச் செய்து வாழ்த்திக்கொண்டு நிற்குநிலையைப் பாங்கி தலைவற்குக்காட்டடல்.

---

* தொல். எழுத். உயிர். சூ. ௫0,

உரவிப் பெருங்கலித் துன்பங்கள் போய்முத லூழியின்பம்
வரவிப் படிதன்னை வாழ்வித்த வாணன்றென் மாறையன்னாள்
புரவிப் புனைநெடுந் தேரண்ணலே நின் பொருட்டணங்கைப்
பரவிப் பரவிநின் றேவரம் வேண்டுதல் பார்த்தருளே.

இ - ள். புரவிபூட்டி யலங்கரித்த நெடியதேரையுடைய மன்னவனே! வலிய இப்பெருங் கலியுகத்துன்பங்கள் போய்க் கிரேதாயுகத்தின்பம் வர இப்புவியை வாழச்செய்த வாணன் தென்மாறைநாடுபோல்வாள் நின்பொருட்டாகத் தெய்வத்தைவாழ்த்தி வாழ்த்தி வரம்வேண்டுதலைப் பார்த்தருள்வாயாக. எ - று.

உரம் - வலி. கலி - கலியுகம். முதலூழி - கிரேதாயுகம். படி - புவி. புரவி - குதிரை. (உ௮௬)

பராநிலைகண்ட தலைவிமகிழ்தல்.

(இது வெளிப்படை.)

இவ்வித் தகமிவட் கெய்திய தெவ்வண மெவ்வுலகும்
வவ்வித் திகழ்புகழ் வாணன்றென் மாறை மணம்பொருட்டால்
நவ்வித் தொகையின நாணுமென் னோக்கி நறைபுகையாச்
செவ்வித் தகைமலர் தூய்த்தெய்வம் வாழ்த்துந் திருத்தகவே.

இ - ள். எவ்வுலகத்தையுங் கவர்ந்து திகழப்பட்ட புகழையுடைய வாணன் தென்மாறைநாட்டில் மான் தொகுதியின் நாணப்பட்ட மெல்லிய நோக்கையுடையாள் மணங்காரணமாக நறும்புகையைப் புகைத்து நாட்கொண்ட அழகையுடைய மலரைத்தூவித் தெய்வத்தை வாழ்த்துஞ் சிறந்தமுறைமையாகிய இவ்வல்லபம் இவட்குப்பொருந்தியதெப்படி? எ - று.

வித்தகம் - வல்லபம். பொருட்டு - காரணம். 'மென்னோக்கி மணம் பொருட்டு' என இயையும். நவ்வி - மான். தொகை - இனம். நறை - நறும் புகை. செவ்வி - காலம். தகை - அழகு. திருத்தகவு - சிறந்த முறைமை.

'காதலன் முலைவிலை 'அடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தலும்' 'தலைவி மணம்பொருட்டாக அணங்கைப்பராநிலைகாட்டலும்' வரைவு முயல்வுணர்த்தல். 'பாங்கி தமர்வரை வெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தல்' ஒன்றும் வரைவெதிர்வுணர்த்தல். 'நற்றாயுள்ள மகிழ்ச்சி யுள்ளலும்', 'உவகையாற்றாதுளத்தொடு கிளத்தலும்', 'தலைவனைப் பாங்கிவாழ்த்தலும்' 'வரைவெதிர்ந்து மகிழ்தல். 'தலைமகளணங்கை பராநிலைகண்டோன் மகிழ்தல்' ஒன்றும் பராவல்கண்டுவத்தலெனக்கொள்க. (உ௮௭)

ஸ்ரீந்திணையும் ஐம்பத்தோன்றநாட் செய்திவென்றுணர்க.

அறத்தொடுநிற்றல்.

அறத்தொடுநிற்றல் எ - து. களவைமுறையே வெளிப்படுத்தி நிற்றல். முறையே வெளிப்படுத்திநிற்றலாவது தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்; பாங்கி செவிலிக்கறத்தொடு நிற்கும், செவிலிநற்றாய்க் கறத்தொடு நிற்கும், நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடுநிற்குமென்று கொள்க. அறத்தொடுநிற்றற்குப் பொருள் முறையேவெளிப்படுத்தி நிற்றலென்பது. இப்பொருள் எவ்விடத்திற்குமாகாது. இவ்விடத்திற்குமாத்திரமென்றுகொள்க. ஆதலால், இக்களவி வெளிப்படுத்தற்கு மாத்திரம் மெய் அறத்தொடுநிற்றலெனஅவரால் நாட்டப்பட்ட பெயராயிற்றெனக்கொள்க.

* "முன்னிலை முன்னிலைப்புறமொழி யென்றாங்-கன்னவிருவகைத்தறத்த்தொடுநிலையே."— என்னுஞ் சூத்திரவிதியான் அறத்தொடுநிற்றல் இருவகைப்படும்.

கையறு தோழி கண்ணீர் துடைத்தல்.

கையறுதோழி கண்ணீர்துடைத்தல் எ-து. ஆற்றிக் கையற்ற தோழியருகிருந்து கண்ணீர்துடைத்தல். கையறல் - செயலறல்.

வரைவுமலிவான் மனமகிழ்ச்சியடைந்திருக்கும் தலைவி யழுதுகொண்டிருத்தல் மாறுபாடெனின் மாறுபடாது. என்னை, - களவுப்புணர்ச்சியால் அலர் மிகவுமெழுதல்கண்டு தந்தையர்முதலாயினோர்வெறுப்படைந்ததறிந்த தலைவன் பிரிந்தேக பிரிவாற்றாமல் தலைவியழுதனளென்க. வெறுப்படைந்ததனால் மணத்தை மறுக்க, அதனால் தலைவன் பிரிந்தேக ஆற்றாமையினால் தலைவியழுதனளென்று செய்யுளிற்கூறியது. இன்றெனின்,மேலேகற்பொடுபுணர்ந்த கவ்வையின்மகளெங்கே போயினளென்று செவிலிபாங்கியை வினவுழி, ¶ 'வெறுத்தாரொறுத்துரை மேலு நங்கேளிர் விழைதவின்றி, மறுத்தாரவற்குமணமதனால்' என்பதனாற்கண்டுகொள்க.

அயிர்ந்தார் திரைவந்துன் வண்டலம் பாவை யழித்தனவோ
செயிராத வன்னை செயிர்த்தன ளோசெறி நாரைதிண்போர்
வயிரா நரலும் வயற்றஞ்சை வாணன்றென் மாறையிலென்
உயிரா கியதைய லீகலுழ் வானென் னுளங்குழைந்தே.

இ - ள். நெருங்கிய நாரைகள் போர்க்களத்தி லொலிக்குங் கொம்பு போலொலிக்கும் வயலையுடைய தஞ்சைவாணன் தென்மாறைநாட்டில் என்னுயிர்போன்ற தையலே! நீ யுளங்குழைந்து கலுழக் காரணமென்னை? நுண்மணலார்ந்த திரைவந்து உன் வண்டலம் பாவையழித்தனவோ? ஒருகாலுஞ் சினவாத அன்னை சினந்தனளோ? யானறியக்கூறுவாயாக. எ-று.

---

* அகப்பொருள்விளக்கம், வரைவியல் சூ. ௩.

¶ தஞ்சைவாணன்கோவை, செ. ௩௩௪.

அயிர் - நுண்மணல். வண்டலம்பாவை - மண்ணுற்செய்த பாவை. செயிர்த்தல் - சினத்தல். உயிர்—போர்க்களத்திலொலிக்கும் கொம்பு. நரலுதல் - ஒலித்தல். கலுழ்தல் - அழுதல். என்-யாதுகாரணம்? இதனுட் கூறுவாயாக என்பது சொல்லெச்சமாக நின்றது. (உஅஅ)

தலைமகள் கலுழ்தற்காரணங்கூறல்.

(இது வெளிப்படை.)

தாரணி கொண்ட விருதோ ளொருவர் தனித்துழியென்
வாரணி கொங்கை மணந்துசென் றூர்தஞ்சை வாணனென்னூர்
தேரணி வென்ற செழும்புகர் வேல்விழித் தேனினஞ்சூழ்
காரணி மென்குழ லாயது வேகலுழ் காரணமே.

இ - ள். தாளை யழகாகக்கொண்ட இருதோளையுடைய ஒருவர் தனித்தவிடத்து என்வாரணிந்த கொங்கையைக்கூடிச் சென்றூர். தஞ்சை வாணன்ஒன்னூரது தேர்நிரையைவென்ற செழுமையாகிய இரத்தக்கறை நிறத்தையுடைய வேல்போன்ற விழியையும், வண்டினஞ்சூழ்ந்த மேகத்தினழகைக்கொண்ட மெல்லிய குழலையுமுடையாய்! யான்அழுங் காரணமது.

தார் - மாலை. வார்-கச்சு. தேரணி - தேர்நிரை. புகர் - உதிரக்கறை. கார் - மேகம். அணி - அழகு. (உஅகூ)

தலைவன் தெய்வங்காட்டித்தெளிப்பத் தெளிந்தமை யெய்தக்கூறல்.

தலைவன் * * * யெய்தக்கூறல் எ - து. தலைவன் தெய்வத்தைக் காட்டிக் கரியென்று சூளுறவு சொல்ல மெய்யென்று தெளிந்துஅதனைப் பாங்கிக்குப் பொருந்தக்கூறல்.

துதித்தே னணங்கொடு சூளுமுற் றேனென்ற சொல்லைமெய்யா
மதித்தே னயர்ந்து மதியிலி யேன்றஞ்சை வாணன்வையை
நதித்தே னினம்புணர் மாதர்கண் போல நகைக்குநெய்தல்
பொதித்தே னுகர்ந்தக லுங்கழிக் கானற் புலம்பர்வந்தே.

இ - ள். தஞ்சைவாணன் வையைநதியிலே குலாவப்பட்ட வண்டினம்மடவார்கண்போல் ஒளிவிடும் நெய்தற் பூவினிடத்துப் பொதிந்த தேனைநுகர்ந்து பிரிந்துபோங் கழிக்கரைச்சோலையுடைய புலம்பர்வந்து துதித்துத் தெய்வத்துடனே சூளையுமுற்றேனென்று அவர் சொன்ன மெய்யாய் மதியிலியாகிய யான்மறந்து மதித்தேன். எ - று.

சூள் - ஆணைகூறல். அயர்ந்து - மறந்து. தேனினம் - வண்டினம். நகை - ஒளி. பொதிதல் - நிறைதல். வண்டினம் தலைவனாகவும், நெய்தற் பூ தானாகவும், தேன் தன்னிடத் தின்பமாகவும், அவ்வண்டு தேனுகர்ந்து நீங்கியதுபோலத் தலைவன் தன்னிடத்து இன்பநுகர்ந்து பிரிந்து போயினானென்னும்உள்ளுறையுவமங்கொள்ளக்கிடந்தது. இவ்வாறு தெய்வத்தொடு சூள் முற்றினேனென்று சொல்லியது எக்கிளவிப் பொருளெனின், வன்புறையில் 'பிரியேன்' என்னும் கிளவியிலென்றுணர்க. ஆணைகூறல் அக்கிளவிச் செய்யுளில்லையாலெனின் 'பிரியேன்' என்றது வேறோர் கிளவியினு மில்லையால் அதுவே பொருளென்றுணர்க. (௨௯௦)

இறைவிதலைவன் இகந்தமையியம்பல்.

இறைவிதலைவன் இகந்தமையியம்பல் எ-து. இறைவிதலைவன் நீங்கினமைகூறல்.

வரியோல வண்டலை தண்டலைசூழ் தஞ்சை வாணன்வண்மைக்
குரியோ னுயர்வையை யொண்டுறை வாயுர வோர்தெளித்தும்
கரியோர் பிறரில்லை யென்றகன் றாரினிக் காரிகையாய்
பெரியோர் மொழிபிற ழாதொன்று தேறுதல் பேதைமையே.

இ - ள். காரிகையாய்! பண்ணையொலிக்கப்பட்ட வண்டுகள் செலவும்வரவுமாய் அலையப்பட்ட சோலைசூழ்ந்த தஞ்சைவாணனாகியகொடைக்குரியோனுடைய உயர்ந்த வையையாற்றின் ஒள்ளிய துறையிடத்தில் உரவோர் தெய்வமுன்னாகத் தெளியச்செய்தும் கரியோர் பிறிதொருவருமில்லை யென்று நம்மைப்பிரிந்து போயினார்; ஆதலால், இனிப் பெரியோர்சொல்லிய சொல் தப்பாதொன்று தெளிவது பேதைமை. எ - று.

வரி - பண். ஓலம் - ஆரவாரித்தல். தண்டலை-சோலை. உரவோர்-அறிவோர். தெளித்தல்-தெய்வத்தின்முன்னாகத் தெளியச்செய்தல். உம்மை - சிறப்பு. கரியோர் - சான்று கூறுவோர். பிறழ்தல் - மாறுபடுதல். பெரியோர்மொழி பிறழாதொன்று தேறுதல் பேதைமையென்பது †"இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்" என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்தில் தெளிந்துரைத்தல் ஆங்கு'நெஞ்சளித்தல்' என்பதனால் 'அன்றளித்துரைத்தல்' என்னும் மெய்ப்பாடு கூறியவாறுணர்க. (௨௯௧)

பாங்கியியற்பழித்தல்.

பாங்கியியற்பழித்தல் எ - து. தலைமகன் இயலைப் பாங்கி பழித்துக்கூறல்.

மழவே துறந்து மறந்தவர் போற்றஞ்சை வாணன் வென்றி
முழவேய முந்நீர் முழங்கிருங் கானன் முழுதுலகும்
தொழவே தகுந்தெய்வ நோக்கிச்செல் லேனென்று சொல்லியுநீ
அழவே துறந்தன ரானல்லர் நல்லரவ் வாடவரே.

---

† தொல். பொருள். மெய்ப். சூ. ௨௨.

இ - ள். தஞ்சைவாணனது வெற்றி முரசொலிக்கொப்பாகக் கடல் முழங்கப்பட்ட பெரிய கழிக்கரைச் சோலையிடத்து உலகமுழுதுந் தொழத் தக்க தெய்வத்தை நோக்கிப் பிரியேனென்று சொல்லியும் இளமைப்பருவத்தே துறந்து மறந்தவர்போல நீ அழத்தக்கதாகத் துறந்து போயினாராதலால் அவ்விடத்தவர் நல்லர் நல்லர். எ - று.

மழவு - இளமை. முழவு - முரசு. ஏய - ஒப்பாக. முந்நீர் - கடல். இருமை-பெருமை. கானல் - சோலை 'உலகமுழுதும்'என இயைபடம், நல்லார் - நல்லர். தீயார் - தீயர் என இகழ்ச்சிக் குறிப்பின்கண் வந்த அடுக்குமொழி. 'அவ்விடத்தவர் நல்லார் நல்லர்' என இயையும். (உகூஉ)

தலைமகளியற்படமொழிதல்.

தலைமகளியற்படமொழிதல் எ-து. அங்ஙனங்கூறக்கேட்ட தலைமகட்டோழி பொருள் ஓரியல்புபட மொழிதல்.

மாகப் புயன்மண்ணில் வந்தன வாணன்றென் மாறைமுந்நீர்
நாகப் புகர்ச்செய்ய புள்ளிபைங்கான் ஞெண்டு நாகிளந்தண்
பூகக் குளிர்நிழற் பேடையொ டாடும் புலம்பரின்னோர்
ஆகக் கருதினல் லாயினி யாரினி யாருளரோ.

இ - ள். நல்லாய்! வானத்திடத்திலிருக்கும் மேகம் மண்ணிடத்தில் வந்தது போன்ற வாணன் தென்மாறை நாட்டுக் கடலிடத்துப்புன்னைமரத்தடியிலிருக்கும் புகராகிய சிவந்தநிறப் புள்ளியையும் பசியகாலையுமுடைய ஆண் ஞெண்டு நாகுப்பருவத்தையுடைய ஞெண்டையும் தட்பத்தையுமுடைய குளிர்ந்த கமுகினிழலில் பெடைஞெண்டைப் பிரியாமற்கூடும்புலம்பனாப் பொல்லாராகக் கருதின் நமக்கு இனியராயுள்ளார் இனியார்? எ-று.

அவரோ நமக்கு இனியராய்வந்துகூடுவாராதலால் அவரை இயற்பழித்துக் கூறத்தகாதென்றவாறாயிற்று.

மாகம்- ஆகாயம். புயல்-மேகம். நாகம் புன்னை. நாகு-இளங்கன்றுப் பருவம்நீங்கிக் கருக்கொள்ளுங்காலம். என்னை, பசு எருமைமுதலியவற்றில் கருக்கொள்ளும் பருவத்திற்கு நாகு என்னும் பெயருலக வழக்கினுங் கண்டுகொள்க. புலம்பன்-நெய்தற்றலைவன். பூகம்-கமுகு. பெடை-பெடை ஞெண்டு. இன்னார்-பொல்லார். இனியார் - நல்லார்.

புன்னைமர நிழலிலிருக்கும் ஆண்ஞெண்டு பூகமர நிழலிலிருக்கும் பெடையொடு கூடும், புலம்பர் என்பதனால் தலைவன் தலைவியை வந்து கூடுமென் உள்ளுறையுவமங்கொள்ளக் கிடந்ததெனின், அங்ஙனங் கூட்டம் பெருவாய்ப் பிரிந்துவருந்துகின்றாளாதலால் உள்ளுறையுவம

மாகாது இறைச்சி பிறக்கும் பொருளாயிற்றெனக் கொள்க. இறைச்சியிற் பொருளாவது *“இறைச்சிதானே பொருட்புறத்ததுவே.” “இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே-திறத்தியன் மருங்கிற் றெரியுமோர்க்கே.” என்றாராகலின் இறைச்சியென்றும்-இறைச்சியிற் பொருளென்றுங் கூறிய சூத்திரங்கட்கு நச்சினார்க்கினியார் செய்த வுரையிற் கண்டுகொள்க. (௨௧௩)

தெய்வம்பொறைகொளச்செல்குவமென்றல்.

தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றல் எ - து. தெய்வத்தின் பிரியேனென்றாணைகூறிப் பிரிந்துபோனாரால் தெய்வங் கொடுந்தெய்வமாதலால் சீறாதபடி அவர் எங்கட்குக் குற்றஞ்செய்தாரல்லர், நீ பொறுத்துக் கொள்ளென்று வேண்டிக் கோடற்கு இருவேமும் வோதுவோமென்று தலைவி பாங்கியுடன் கூறியது.

மாதங்க நல்குங்கை வாணன்றென் மாறைவை யைத்துறைவர்
ஏதம் பயந்தில ரெங்கட்கு நீயெம் மிகந்ததனால்
கோதம் படாதி கொடுந்தெய்வ மேயென்று கூர்பலிதூய்ப்
பாதம் பரவநல் லாயிரு வேமும் படர்குவமே.

இ - ள். புலவோர்க்குப் பெருமையையுடைய தங்கங்களைக்கொடுக்குங் கையையுடைய வாணன் தென்மாறைநாட்டு வையைத்துறைவர் எங்கட்குக் குற்றத்தைத் தந்தாரல்லர்; எம்மைப் பிரிந்ததனாலே கொடுந்தெய்வமே! நீ குற்றப்படாதையென்று மிகுந்த பலிகளைத் தூவிப் பூதத்தைத் துதிக்க இருவேமுஞ்செல்வோம். எ - று.

நல்கும் - கொடுக்கும். ஏதம் - குற்றம். பயந்திலர் - கொடுத்திலர். தூத்துதல் - இரிதல். கோது - குற்றம். அம் - அசைநிலை. படர்தல் - செலுத்தல். (௨௧௪)

இல்வயிற்செறித்தமைசெப்பல்.

இல்வயிற் செறித்தமை செப்பல் எ - து. தலைவிதன் மெய்வேறுபாட்டாலும் ஊரிலுள்ளார் அலர் தூற்றலாலும் நற்றாய் உளத்தில்வேறுபாடு மனையிடத்தில் என்னைக் காவல் செய்தாளென்று பாங்கிக்குக் கூறல்.

தன்பேரா லுலகம் புரக்கின்ற வாணன் றமிழ்த்தஞ்சையார்
மன்போ லெவர்க்கும் வழங்கி யுண்ணாதவர் வைத்திழக்கும்
பொன்போ லிறுகப் பொதிந்து கொண்டாளன்னை பூவையின்மேல்
வன்போ தியமட வாரலர் தூற்றிய வாறுகண்டே.

* தொல். பொருள். பொருளியல், சூ. ௩௫, ௩௬.

இ - ள். பூவைபோல்வாய்! தன்னுயிர்போல உலகத்திலுள்ள வுயிரெல்லாங் காக்கின்ற வாணனுகிய தமிழ்த்தஞ்சையார்வேக்தைப்போல யார்வர்க்கும் வழங்கியுண்ணுதவர் வைத்திழக்கப்பட்ட பொன்னைப்போல என்னை அன்னை என்மேற் பொல்லாங்கு கூறப்பட்ட நமக்கு அயலாராகிய மடவார் அலர் தூற்றிய முறைமையைக் கண்டு இறுக முடிந்துகொள்ளுதல் போலுஞ் செறிப்புச் செய்தாள். எ - று.

புரத்தல் - காத்தல். பொதிதல் - முடிதல். வன்பு - பொல்லாங்கு. 'உண்ணுதவர் வைத்திழக்கும் பொன்போல்' எனவே, அன்னையுக்தன்னை யிழப்பவளாதலால் 'அலர்போல் பொதிந்துகொண்டாள்' என உள்ளுறையுவமங்கொள்க. (உகரு)

செவிலி கனையிருள்அவன்வரக் கண்டமைகூறல்.

செவிலிகனையிருள் அவன் வரக் கண்டமைகூறல் எ-து. செவிலி செறிந்த இருட்குறியிடத்துத் தலைவன் வரக்கண்டாளெனத் தலைவி பாங்கிக்குணர்த்தல்.

வெங்கார் முகவெம்புருவ மின்னேயன்னை மேலொருநாள்
எங்கா தலரிரு ளெய்தல்கண் டாளிந்த வேழுலகும்
மங்காமல் வந்தருள் வாணன்றென் மாறைவண் டானமஞ்சச்
சங்காழி கொண்டெறி யுங்கண்டல் வேலியத் தண்டுறைக்கே.

இ - ள். வெவ்விய விற்போன்ற வெய்ய புருவத்தையுடைய மின்னே! இந்த ஏழுலகுங் கெடாமல்வந்து காக்கப்பட்ட வாணன் தென்மாறைநாட்டில் வண்டான மஞ்சக் கடலானது சங்கைக்கொண்டெறியும் தாழைவேலி செய்தாற்போனிருக்கின்ற தண்ணியதுறையின்கண் எம்முடையகாதலர் இருட்குறி வருதலை முன்னம் ஒருநாள் அன்னைகண்டாள். எ - று.

கார்முகம் - வில். மங்காமல் - கெடாமல். வண்டானம்-நாரை. 'ஆழி சங்கு' எனஇயையும். கண்டல் - தாழை. சங்குகொண்டெறிதல் - திரைவிசையால் சங்கினை யுந்துதல். (உகசு)

இவற்றுள் கலுழ்தற் காரணங் கூற லொன்றுமொழித்து ஏனையவெல்லாம் பாங்கி வினுவாதொழியவும் தலைவி அறத்தொடுநிற்கு நிலைதனக்குரியவாமாறு அறிந்துகொள்க.

செவிலிநிலைமகள்வேற்றுமைகண்டுபாங்கியைவினாதல்.

(இது வெளிப்படை.)

பொன்னுற்ற கொங்கையு முத்துற்ற கண்ணுமிப் போதுகண்டேன்
பன்னுற்ற சொல்லுமின் பாலுங்கொள் ளாள்பதி னாலுலகும்
மன்னுற்ற வண்புகழ் வாணன்றென் மாறையென் மானனையாட்
கென்னுற்ற தென்றறி யேன்புனங் காவ லிருந்தபின்னே.

இ - ள். பொன்போன்ற பசலைநிறம்பொருந்திய கொங்கையும் முத்துப்போலநீருற்றகண்ணும் இப்போது கண்டேன்; அதுவன்றியும் யான்சொல்லுஞ்சொல்லும் இனிய பாலையுமுட்கொள்ளாள், ஆதலின், பதினாலுலகும் மன்னுற்றவளவிய புகழையுடைய வாணன் தென்மாறைநாட்டில் புனங்காவலிருந்தபின் என்மான்போன்றவட்கு யாதுற்றதென்றுயானறியேன்.

'பதினாலுலகும்' என்புழி உம்மை முற்றும்மை. 'புனங்காவலிகந்த பின்னே' என்று பாடமோதுவாருமுளர். (௨௧௭)

பாங்கிவெறிவிலக்கல்.

பாங்கி வெறிவிலக்கல் எ - து. செவிலி வெறியாட்டாளனை யழைத்து மகட்கு நோயுற்றவாறும், அது தீருமாறும் சொல்லவேண்டுமென்று கேட்புழி; தெய்வம்வந்தாடும்போது பாங்கி அத்தெய்வத்தை ஆடவேண்டாமென்று விலக்குதல். வெறியாட்டாளன் ஆடு பலிகொடுத்தால்தீருமென்புழி அவ்வாட்டைக் கொல்லாமல் விலக்கலெனினும் அமையும்.

அறியா மையினென்று கேட்கலுற் றேனும்மை யாவதொன்றும்
குறியா மறியுயிர் கொள்ளவென் றோகுரு திப்பலிகூர்
வெறியா லிவளுயிர் மீட்கவென் றோவென்றி வேல்வலத்தீர்
சிறியார் மனையில்வந் தீர்தஞ்சை வாணன் சிலம்பினின்றே.

இ - ள். வெற்றிவேலை வலத்திலுடையவரோ! நும்மையாம் அறியாமையினால் ஒன்று கேட்கலுற்றேம் ஆவதொன்றுங் குறியாது மறியுயிரைக் கொள்ளவென்றோ அந்த விரதப்பலி தரும் மிகுந்த வெறியினாலே இவள் உயிரைமீட்கவென்றோ தஞ்சைவாணன்சிலம்பினின்றுஞ் சிறியார்மனையில் வந்தீர்! திருக்கோயிற் கெழுந்தருள்வீர். எ - று.

மறி - ஆடு. 'திருக்கோயிற்கெழுந்தருள்வீர்' என்றது, அவாய்நிலையான் வந்தது. (௨௧௮)

வெறிவிலக்கியவதனும் செவிலி பாங்கியைவினுதல்.

(இதுவெளிப்படை.)

மண்குன்ற வந்த கலியினை மாற்றிய வாணன்றஞ்சை
ஒண்குன்ற மங்கையர் முன்னர்மின் னேயுமை யாண்மகனைப்
பண்குன்ற வென்றசொல் வள்ளிதன் கோனைப்பைந் தாரயிலால்
வெண்குன் றெறிந்தசெவ் வேளையிவ் வாறென் விளம்பியதே.

இ - ள். உலகங் குன்றவந்த கலியுகத்தைமாற்றிய வாணன் தஞ்சைய தொள்ளிய குன்றிடத்து மின்னே! உமையாள் மகனைப் பண்குறைய வென்ற சொல்லையுடைய வள்ளிக்கு நாயகனைப் பசியமாலைசூடிய வேலினாலே வெண்குன்றமாகிய குருகுபெயர்க்குன்றத்தையெறிந்த செவ்வேளை மங்கையர்முன்னர் இவ்வாறு நீவிளம்பியதென்? எ - று.

அயில் - வேல். வெண்குன்று - கிரவுஞ்சகிரி. 'குன்ற மின்னே' எனவும், 'செவ்வேளை மங்கையர்முன்னே' எனவும் 'விளம்பியதென்னே' எனவுமியையும். (உகக)

தோழிபூத்தருபுணர்ச்சியால்அறத்தொடுநிற்றல்.

தோழிபூத்தரு புணர்ச்சியா லறத்தொடுநிற்றல் எ - து. பூவைக்கொடுத்ததனாற் புணர்ந்த களவை வெளிப்படுத்திக்கூறல்.

போருறை திக்கணை போலுநின் கண்கண்டு போதவஞ்சி
நீருறை நீலமு நீயுநண் பாகென்று நின்மகட்கோர்
தாருறை தோளவர் தந்தனர் வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
காருறை சோலையில் யாம்விளை யாடிய காலையிலே.

இ - ள். அன்னாய்! போருறைந்த தியகணையை யொக்கும் நினது கண்ணைக்கண்டு மிகவுமஞ்சி நீரிலேயொழித்துறைந்தநிலமும் நீயும் உறவாகவென்று நினது மகட்கு ஒரு தாருறைந்ததோளையுடையவர் வாணன்தமிழ்த் தஞ்சையைச் சூழ்ந்து புயலுறைந்த சோலையிடத்து யாம் விளையாடிய காலத்தில் நீலப்பூவைத்தந்தனர். எ - று.

நண்பு - உறவு. தார் - மாலை. கார் - புயல். (கூ00)

புனறருபுணர்ச்சியால்அறத்தொடுநிற்றல்.

புனறருபுணர்ச்சியா லறத்தொடுநிற்றல் எ-து. புனலாற் கூடும் புணர்ச்சியை வெளிப்படுத்திக் கூறல்.

ஒழிதோற் றியசொல்ல லுன்மக ளோதிக் குடைந்தகொண்டல்
பொழிதோற் றிரளுந்தி வந்தசெந் நீருந்திப் பொற்பினுக்கோர்
சுழிதோற் றிடும்பகை தீர்க்கின்ற போதொரு தோன்றலுமவ்
வழிதோற் றிவந்தெடுத் தான்றஞ்சை வாணன்றென் வையையிலே.

இ - ள். அன்னையே! நின் மகள் ஓதிக்கொப்பநில்லா துடைந்த மேகம் தோற்ற பகைதீர்த்தற்காய்ப் பொழியப்பட்ட யானைத்திரளைத் தள்ளிக் கொண்டு வந்த சிவந்த நீர்வெள்ளந் தஞ்சைவாணன் தென்வையையிடத்துப் பெருக நின்மகளும் நதிக்குத்தோற்றுப்போன பகையைத் தீர்த்தற்கு யாம் நீராடியகாலத்தில் சுழிவந்து நின்மகளை வாங்கிக்கொண்டு போம் போதில்அவ்வழியிலே வருவான் ஒருவேந்தன் வந்தெடுத்தான், ஆதலால் நின்கருத்தில் தோன்றியதனைச் சொல்லுத லொழிவாயாக. எ - று.

எனவே,-புணர்ச்சியுண்மை குறிப்பினாற் றோன்றியவாறாயிற்று. ஓதி-கூந்தல். கொண்டல் - மேகம். தோல் - யானை. உந்தி-தள்ளி. உந்தி-கொப்பூழ். தோன்றல்-வேந்தன். (௯௰௧)

களிறுதருபுணர்ச்சியால் அறந்தொடுநிற்றல்.

களிறுதருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல் எ - து. களிறுதரு புணர்ச்சியாற் களவை வெளிப்படுத்தல்.

மண்ணலை யாமல் வளர்க்கின்ற வாணன்றென் மாறைவெற்பில்
அண்ணலை யாயிழை பாகனென் றஞ்சின மஞ்சனந்தோய்
கண்ணலை நீரிடப் பாகமு மேல்வந்த கைக்களிற்றின்
புண்ணலை நீர்வலப் பாகமுந் தோயப் பொருதலன்றே.

இ - ள். அன்னையே! இப்புவியை அலையாமல் வளர்க்கின்றவாணன் தென்மாறை வெற்பில் யாம் சோலையில் விளையாடுகையில்ஓர் யானைபாய வரும்போது நின்மகள் அலறிக்கூவ, அப்போது அவ்வழியில்வருகின்றானொருவேந்தன் விரைந்துவந்து அஞ்சலை யென்று நின்மகளை இடப்பக்கத்திலணைத்துக்கொண்டு வலதுகையில் வேல்வாங்கி மேல்வந்தகையொடுங் கூடிய யானைமுகத்தி லழுத்திப்பொருதவன்று ஆனைப்புண்ணில் அலைபோல் வருங்குருதிநீர்வலப்பாகமெல்லாம் நனைத்தலால்வலப்பால்சிவந்தும், அவள் அழுதபோது கரைந்து கண்ணாகிய கடலில் வருநீர் இடப் பாகங் கறுத்தும், ஆணுருவும் பெண்ணுருவு மொன்றாய்த் தோன்றிய வதனால்அவ்வேந்தனை ஆயிழைபாகனென்ன யாம் அஞ்சினம். எ - று.

எனவே,-குறிப்பால் புணர்ச்சி யுண்மை யறிவித்தவாறு காண்க. அண்ணல் - வேந்தன். ஆயிழைபாகன் - சிவன். அஞ்சனம் - மை. அலை-கடல்

தலைமகள் வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியைவினாதல்.

(இது வெளிப்படை.)

தண்டார் தழுவிய வேலண்ணல் வாணன்றென் றஞ்சைவெற்பில்
வண்டார் குழலிதன் வண்ணமுங் கண்ணும் வடிவுமுன்னாள்
கண்டா ரறியும் படியன வேயல்ல காரணமொன்
றுண்டா லுயிரனை யாயயி ராமலுரை யெனக்கே.

இ - ள். உயிரனையாய்! தண்ணியமாலையணிந்தவேலுடைய வாணனது அழகிய தஞ்சை வெற்பிடத்து வண்டார்ந்த குழலையுடையாளது நிறமும் கண்ணும் வடிவும்முன்னாள் கண்டார்க்குஇப்போதுவேறுபட்டிருத்தலால் அறியுந்தன்மையனவேயல்ல; இவ்வடிவு வேறுபடுதற்குக் காரணம் ஒன்றுண்டாதலால் இக்காரணத்தை ஐயுறாமல் எனக்குரைப்பாய் எ-று.

ஐயுறுதல் - சொல்லத்தகாதென்று மறைத்தல், தண்டார் - மாலை. தழுவிய-அணிந்த. தென் -அழகு. வண்ணம் - நிறம். அயிர்த்தல் - அயர்ப்புறுதல். (௩0௩)

செவிலிநற்றாய்க்கு முன்னிலைமொழியால் அறத்தொடுநிற்றல்.

செவிலிநற்றாய்க்கு * * * அறத்தொடுநிற்றல் எ - து. முன்னிலைப் புறமொழியாலுணர்த்தாது முன்னிலை மொழியினாலே களவை வெளிப்படுத்திக்கூறல்.

மலைவந்த தோவெனும் வாரண வாணன்றென் மாறைமதிச்
சிலைவந்த தோவெனு நன்னுத லாயொரு செல்வரிங்கோர்
கலைவந்த தோவென வந்துவி னாவிநங் காரிகைக்கு
முலைவந்த தோவில்லை யோவென்னு நாளின் முயங்கினரே.

இ - ள். மலைவந்ததோவென்று ஒப்புக்கூறும் வாரணத்தையுடைய வாணன்தென்மாறைநாட்டில் மதிவந்ததோ! சிலைவந்ததோ! என்று ஐயந்தரு நல்ல நுதலையுடையாய்! புனங்காக்குநாளில் ஒருதலைவர்வந்து இங்கோர் கலைவந்ததோவென்று வினாவி, நம்முடைய பெண்ணுக்கு முலைவந்ததோ இல்லையோவென்னும் பேதும்பைப் பருவத்து முயங்கினர். எ - று.

வாரணம்-யானை, 'வந்ததோ' என்பதனைமதிக்குங் கூட்டுக. மதி-ஈண்டு பிறை. முயங்கல் - புணர்தல், 'செல்வர்வந்து' என இயையும். ஓகாரம் அனைத்தும் ஐயம்.

'தலைவி பாங்கிக்குமுன்னிலைமொழியால் அறத்தொடுநிற்றலும்' செவிலிநற்றாய்க்குமுன்னிலைமொழியா லறத்தொடுநிற்றலும்' ஆகியஇரண்டும் 'பூத்தருபுணர்ச்சி'முதல் மூன்றும் முன்னிலைமொழி; வெறிவிலக்கல் ஒன்றும் முன்னிலைப் புறமொழி. (௩0௪)

அறத்தொடுநிற்றல்-முற்றிற்று.

உடன்போக்கு.

அஃதாவது, தலைவன் தன்னூர்க்குத் தலைவியை யுடன்கொண்டு போதல்.

† "போக்கேகற்பொடு புணர்ந்தகளவை
மீட்சியென்றாங்கு விளம்பியமூன்றும்
வெளிப்படைக்கிளவியின் வழிப்படுதொகையே.'— என்னுஞ்
சூத்திரத்தால் உடன்போக்கு மூவகைப்படும்.

† "போக்கறிவுறுத்தல் போக்குடன்படாமை
போக்குடன்படுத்தல் போக்குடன்படுதல்
போக்கல்விலக்கல் புகழ்தரேற்றலென்
றியாப்பமையுடன்போக் கிருநான்குவகைத்தே."— என்னுஞ்
சூத்திரவிதியால் உடன்போக்கு எட்டுவகைப்படும்.

பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல்.

பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல் எ - து. காப்புகை மிகலால் உன்னூர்க்குடன்கொண்டுபோதியெனப் பாங்கி தலைவற்குரைத்தல்.

மைந்நீர் நெடுங்கண் மடந்தை யுடன்றஞ்சை வாணன்வெற்பா
செந்நீர் விழவணி நின்னகர்க் கேகொண்டு சேர்ந்தருண்மற்
றிந்நீர்மை யல்லதொ ராறுமின் றுலிங்கெம் மையரென்றுல்
முந்நீ ருலகுங்கொள் ளார்விலை யாக முலையினுக்கே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பா! இவ்விடத்தெம்மையர் கருத்துஞ்
சொல்லின் முலையினுக்கு விலையாக முந்நீர்சூழ்ந்த இவ்வுலகத்தையுங்கொள்ளார்கள். ஆதலால், குங்குமநீராடும் வசந்தத்திருவிழா வலங்காரத்தை யுடைய நின்னகர்க்கு மையெழுதிய நீர்மையையுடைய நெடியகண்ணை யுடைய மடந்தையையுடன்கொண்டு சேர்ந்தருள்வாய். இம்முறையல்லாது நீ வரைவதற்கு வேறோர் வழியில்லை. எ - று.

'வெற்பா இங்கெம்மையர்' எனவும், 'முலையினுக்கு விலையாக முந்நீருலகங்கொள்ளார்' எனவும், 'நின்னகர்க்குமைந்நீர்நெடுங்கண்' எனவும், 'உடன் கொண்டு' எனவும் இயையும். மற்று - வினைமாற்று. செந்நீர் - குங்குமநீர். ஆறு - வழி. (௯௦௫)

† அகப்பொருள் விளக்கம், வரைவியல், நூ. ௧௦, ௧௧.

தலைமகன் மறுத்தல்.

(இது வெளிப்படை.)

பாரோ முலைவிலை யென்பர் நின்கேளி ரொன் பல்கிளைவாழ்
ஊரோ வணியதன் றெண்டொடி யாய்விக்தை யுண்கண்களோ
தாரோ வளரும் புயன்றஞ்சை வாணன் றரியலர்போல்
யாரோ தனிநடப் பாரருங் கானமிவ ளுடனே.

இ - ள். ஒள்ளியவளையினையுடையாய்! நின் சுற்றத்தார் பாரை முலைவிலையென்று சொல்வாரோ? உடன்கொண்டுபோதற்கு என் சுற்றத்தார் வாழுகின்ற ஊரணித்தன்று. அன்றியும், போவாமென்னில் கரியமாதின் மையுண்டகண்களோ தாரோவளரும் புயத்தையுடைய தஞ்சைவாணனுக்குத் தரியலர்போல அரியகாட்டில் இவளுடன் தனியாய் நடப்பவர்யார்?

எனவே, - தரியலர்செல்லுங் கானத்தில் ஏனோர்சேறல் அரிதென்று கூறியவாறாயிற்று. பாரோஎன்புழி ஓகாரம் என்பர் என்பதனோடு கூட்டுக. அவ்வோகாரம்-வினா. ஊர்-யார் என்புழி, ஓகாரம் இரண்டும் அசைநிலை. கண்களோ, தாரோ என்புழி ஓகாரமிரண்டும் எண்ணின்கண்வந்தன. ()

அவளுடன்படுத்தல்.

அவளுடன்படுத்தல் என்பது. பாங்கிதலைவனை யுடன்படுத்தல்.

சுருளேய் குழலுஞ் சுணங்கேய் முலையுஞ் சுமந்துகற்புப்
பொருளே யெனச்சுரம் போதுமப் போது புகழ்வெயிலான்
மருளேய் கலியிருண் மாற்றிய வாணன்றென் மாறையினின்
அருளே யொழியவுண் டோநிழ லாவ தணங்கினுக்கே.

இ - ள். சுருள்பொருந்திய குழற்பாரமுஞ் சுணங்கியைந்தமுலைப்பாரமுஞ் சுமந்து பொருளாவது கற்பேயெனத்தெளிந்து சுரத்திற்செல்லும்போது தன்புகழருளாகிய வெயிலினாலே மயக்கம்பொருந்திய கலியாகிய இருளைமாற்றிய வாணன் தென்மாறை நாட்டிலிருக்கின்ற அணங்கினுக்கு நிழலாவது நின்னருளையே நிழலென்றுகொள்ளுவதல்லாது வேறொன்றை நிழலென்று கொள்ளப்படாது. எ - று.

சுருள் - கடைகுழற்சி, சுணங்கு - மாமைநிறம். உம்மை - எண். பொருளே என்புழி ஏகாரத்தைக் கற்பொடுகூட்டித் தேற்றப்பொருண்மையுரைக்க. மருள் - மயக்கம். மருளே என்புழி ஏகாரம் ஈற்றசை. (கூ0எ)

தலைவன் போக்குடன்படுதல்.

(இது வெளிப்படை.)

நஞ்சோ வழலோ வெனுஞ்சுர மோசெல்ல நாடியவென்
னெஞ்சோ கொடியது நேரிழை யாய்நிழன் மாமதியோ
பஞ்சோ தவழ்மதில் சூழ்தஞ்சை வாணன் வரையிலவம்
பஞ்சோ வனிச்சங் கொலோவெனுஞ் சீறடிப் பைந்தொடிக்கே.

இ - ள். நேரிழையாய்! ஒளியையுடைய மதியுமுகிலுந் தவழப்பட்ட மதில்சூழ்ந்த தஞ்சைவாணன் வரையிலுள்ள இலவம்பஞ்சோ அல்லது அனிச்சம்பூவோ வென்று சொல்லப்பட்டசிறிய அடியையும் பசியகொடியையுமுடையாட்கு நஞ்சோ அழலோவென்று சொல்லப்பட்ட காட்டிற் செல்லக்கருதிய என்னெஞ்சோ மிகக்கொடியது. எ - று.

பைந்தொடி-அன்மொழித்தொகை. அழல் - நெருப்பு. நிழல் - ஒளி. அனிச்சம்-ஆகுபெயர்.

நஞ்சோ, அழலோ என்புழி ஓகாரமும், பஞ்சோ என்புழி ஓகாரமும் அனிச்சங்கொலோ என்புழி ஓகாரமும், ஐயம். சுரமோ என்புழி ஓகாரமும், கொலோ என்புழி ஓகாரமும் அசைநிலை. நெஞ்சோ என்புழி ஓகாரம் சிறப்பு. மதியோ, மஞ்சோ என்புழி ஓகாரமும் எண்ணின்கண் வந்தன. ( )

தலைவிக்குடன்போக்குணர்த்தல்.

தலைவிக்குடன்போக்குணர்த்தல் எ - து. தலைவனுடன் போதலைப்பாங்கி தலைவிக்குணர்த்தல்.

பாலன்ன பாயற் பகையென்னுஞ் சீறடி பட்டுருவும்
வேலன்ன கூர்ங்கன் மிதிக்குங்கொ லென்றனர் மேதினிக்கு
மாலன்ன வாணன்றென் மாறைநன் னாட்டு வயலுகளுஞ்
சேலன்ன நீள்விழி யாய்தெரி யாதன்பர் சிந்தனையே.

இ - ள். மேதினிக்குமால்போன்றவாணனது தென்மாறை நாடுசூழ்ந்தவயலிற்பிறழப்பட்ட சேலையொத்த நீண்ட விழியினையுடையாய்! மல்லிகைப்பூவால் நிறைத்தலால் அப்பாலையொத்த படுக்கையைப் பகையென்று சொல்லப்பட்ட சீறடியாயின் அது பட்டுருவப்பட்ட வேல்போன்ற கூரிய கல்லைமிதிக்குமோவென்றதனால் அன்பர் நினைத்த சிந்தனையாதோ தெரியாது. எ - று.

'மல்லிகைப்பூ வானிறைத்தல்' என்பது அவாய் நிலையான்வந்தது. பாலன்னபாயல் - வண்ணவுவமம். பாயல் - படுக்கை. உகளுதல் - புரளுதல். போல் - ஐயம்.

(௩௦௧)

தலைவிநாணழிவிரங்கல்.

தலைவிநாணழிவிரங்கல் எ - து. உடன்போக்கில்நாணழியுமேயென்றதற்குத் தலைவி யிரங்கிக்கூறல்.

மறவாகை வேலங்கை வாணனை மாறையர் மன்னனைத்தம்
உறவாக வெண்ணி யுறுதவர் போலுயி ரோம்பியென்றும்
துறவாத நாணந் துறப்பது வேண்டலிற் றொல்லுலகில்
பிறவா தொழிகநன் றேயொரு காலமும் பெண்பிறப்பே.

இ - ள். வீரத்தால் வெற்றிகொண்ட வேலை யகங்கையிற் பிடித்த வாணனை மாறைநாட்டார்க்கு மன்னவனைத் தமக்குறவாக வெண்ணி யுறுதவர்போல் உயிர்காத்தற் பொருட்டு என்றுந் துறத்தற்குத்தகுதியல்லாத நாணத்தைத் துறப்பது வேண்டிற்றாகலான், பழையதாகிய உலகில் ஒருகாலமும் பெண்பிறப்புப் பிறவாதொழிந்துவிடல்நன்று. எ - று.

மறம்-வீரம். வாகை-வெற்றி, அங்கை-அகங்கை. * "அகமென்கிளவிக்குக்கைமுன்வரினே - முதனிலை யொழிய முன்னவை கெடுதலும் - வரைநிலையின்றேயாசிரியர்க்க," என்னுஞ் சூத்திரத்தானுணர்க ஓம்பல்-காத்தல்.

கற்புமேம்பாடு பாங்கி கழறல்.

கற்புமேம்பாடு பாங்கி கழறல் எ - து. கற்பின்மேம்பாட்டைப் பாங்கி தலைவிக்குக்கூறுநிற்றல்.

செக்காண் மலரிற் றிருவன்ன கோலத் தெரிவையர்க்கு
மெய்கா ணுயிரினு மிக்கதன் றூல்விர வாவரசர்
தங்கான் முறைமை தவிர்த்தருள் வாணன் றமிழ்த்தஞ்சைநாட்
டக்கா ணெழுமட வாய்கற்பு நோக்க வழகிதன்றே.

இ - ள். மடப்பத்தையுடையாய்! சிவந்த முறுக்கவிழ் பருவத்ததாய் தாமரைமலரிருக்கின்ற திருவையொத்த அழகையுடைய தெரிவையர்க்கு மெய்யின்கணிருக்கின்ற நாண்உயிரினுஞ்சிறந்ததென்றுசொல்லின், உறவு கலவாத வேந்தர் தம்முடைய வாழ்நாள் முறைமை தவிர்த்தவர் இளையாயுள்ளவரிடத்து அருளைத்தரும் வாணன் தமிழ்த்தஞ்சைநாட்டில் நீ சொல்லப்பட்ட இந்நாணமுங் கற்பைக்கருதுமிடத்தில் அழகிதன்று. எ - று.

---

* தொல். எழுத். புள்ளிமயங்கியல், சூ. ௨

திருவென்று கூறினமையால் செந்தாண்மலர்-தாமரைமலர். கேழ்-அழகு. விரவுதல்-கலத்தல். * "உயிரினுஞ் சிறந்தன்று நாணேநாணினுஞ்-செயிர்தீர் காட்சி கற்புச்சிறந்தன்று" என்னுஞ் சூத்திரத்தானுணர்க. (ககச)

தலைவியொருப்பட்டெழுதல்.

(இது வெளிப்படை.)

பலரே சுமந்த வுரைகளுந் தாயர்தம் பார்வைகளுள்
சிலரே சுமந்து திரியவல் லார்செய்ய செண்பகநாண்
மலரே சுமந்த வயற்றஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
அலரே சுமந்து சுமந்திந்த வூர்நின் றழுங்குகவே.

இ - ள். பலரேசிச்சொல்லும் அந்தவார்த்தைகளும் தாயார் சினந்து பார்க்கின்ற கொடியபார்வைகளும் சுமந்து திரிய வல்லமையுடையார் சிலருளர், என்றால் முடியாது; சிவந்த சண்பக நாண்மலரைச்சுமந்த வயல் சூழ்ந்த தஞ்சைவாணனை வாழ்த்தாப் பகைவர்போல வசைகூறுஞ் சொல்லையே சுமந்து சுமந்து இந்தவூரிலுள்ளார் நின்றிரங்குக. எ - று.

'சுமந்து திரியவல்லார் சிலரே'யெனக்கூட்டுக. 'என்றான்முடியாது' என்பது அவாய்நிலையான்வந்தது. 'இந்தவூர்நின்றழுங்குகவே' என்பது இடத்து நிகழ்பொருளின்றொழில் இடத்துமேல் நின்றது. அழுங்குதல்-இரங்குதல்; கெடுதலென்று பொருள்கூறுவாருமுளர். இவள் கற்புடையளாதலால் கூறியசொற்பிழையாளாதலால், அவ்வாறன்றி மீண்டுவந்து மணமுடித்தல்லது பொருளன்மையுணர்க. இரங்கல் பொய்க்குமோவெனில் இருவருடன் போயினபின்னர் அவ்வூரிலுள்ளாரிரங்குதலின் பொய்யாதாயிற்று.

பாங்கி சுரத்தியல்புரைத்துழி தலைமகள் சொல்லல்.

(இது வெளிப்படை.)

செல்லிற் கொடியகளிற் றண்ணல் வாணன்றென் மாறைமன்னன்
வில்லிற் கொடியபு ருவமின் னேயென் விளம்புதி நீ
சொல்லிற் கொடியநம் மன்னையைப் போல்பவர் சூழ்ந்திருக்கும்
இல்லிற் கொடியகொல் லோசெல்லு காட்டவ் விருஞ்சுரமே.

இ - ள். இடியினுங் கொடியதாகிய களிற்றுப் பெருமையையுடைய வாணனாகிய தென்மாறை மன்னனது கையிற்பிடித்த வில்லினுங் கொடிய புருவத்தையுடைய மின்போன்றவளே! யான் செல்லுங்காட்டில் அப்பெரியசுரமானது சொல்லிலே கொடியளாகிய நம்மன்னையைப்போல்வார் சூழ்ந்திருக்கும் இல்லினுஞ் சுரங் கொடியதோ? எ - று.

* தொல். பொருள், களவியல், சூ. ககங.

"'சுரங்கொடியதென நீ விளம்புதி' என்றியையும். சொல்வின் என்புழி சிறப்பும்மை தொகுத்தல். செல்-இடி. அண்ணல்-பெருமை. கொல்-அசை. ஈகாரம்-எதிர்மறை. சுரம்-காடு. (௧.௧௬)

பாங்கிகையடைகொடுத்தல்.

பாங்கி கையடைகொடுத்தல்- எ - து. பாங்கி தலைமகளைத் தலைமகற்குக்கையடைகொடுத்தல். கையடை-அடைக்கலம்.

---

* "பறந்திருந் தும்பர் பதைப்பப் படரும் புரங்கரப்பச்
சிறந்தெரி யாடிதென் றில்லையன் னாடிறத் துச்சிலம்பா
அறந்திருந் துன்னரு ளும்பிறி தாயி னருமறையின்
திறந்திரிந் தார்கலி யும்முற்றும் வற்றுமிச் சேணிலத்தே."

[இது பிறசெய்யுட்கவி.]

† "வடமால் வரைகிரை சாயினும் வண்புயல் வாரிபுகும்
கடனு கியநெறி கைவிட நீங்கினுங் கந்தலைக்கும்
அடன்மா களிற்றன்ப நின்னையன் றூர்பின்னை யென்னையென்னூர்
உடனுய கேண்மை யொழிந்தறி யாரிவ் வுலகத்திலே."—இது உரைகாரர் எடுத்துக்கூறிய பிறசெய்யுட்கவி. (௬௧௪)

பாங்கிவைகிருள்விடுத்தல்.

பாங்கிவைகிருள்விடுத்தல் எ - து. பாங்கியிருளார்ந்த இடையாமத்தில் விடுத்தல். வைகுதல் - தங்குதல்.

பொழிகான மன்றலம் பூங்குழ லீர்கள் புணர்ந்துசெல்லும்
வழிநாடி நும்பின் வருகுவல் யான்றஞ்சை வாணன்வையைச்
சுழிநா ணுமுந்திநின் றொல்கிளைக் கேற்பன சொல்லியின்று
மொழிநா வடங்க மொழிந் தயலாரை முகங்கவிழ்த்தே.

இ - ள். மான்மதம் பொழியப்பட்ட மணத்தோடுகூடியபூவையணிந்த குழலையும் தஞ்சைவாணன் வையைச் சுழிநாணப்பட்ட வுந்தியையுமுடையாய்! நின்பழமையால்வருகின்ற சுற்றத்தார்க் கேற்பனசொல்லி அயலாரை அலர்கூறியநாவடங்க மொழிந்து தலைவனையச்செய்துநீங்கள்கூடிச்செல்லும் வழிதேடி யானும் பின்னேவருவேன். எ - று.

---

* திருக்கோவையார், சே. உ௧௬.
† அம்பிகாபதிகோவை, சே. ௧.௨௫.

கானம் - மான்மதம். மன்றல் - மணம். புணர்தல் - கூடல். கிளை - சுற்றம். இன்னாமொழி-அலர்மொழி. 'மன்றலம் பூங்குழல்தஞ்சைவாணன் வையைச் சுழிநாணு முந்தி' எனக் கூட்டி. ஆகுபெயராகக்கூறுக. (௯௧௫)

தலைமகளைத்தலைமகன்சுரத்துய்த்தல்.

௭. தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தல் எ - து. ஐம்பத்து மூன்றுநாள் தலைமகன் தலைமகளைச் சுரத்திற்செலுத்தல்.

தளிபோற் கொடைபயில் சந்திர வாணன் றமிழ்த்தஞ்சையான்
அளிபோற் குளிர்ந்த விளமரக் காவும வன்புகழின்
ஒளிபோல் விளங்கிய வெண்மணல் யாறுமு வந்துகண்டு
களிபோ தவிழ்குழ லாய்மெல்ல மெல்ல நடந்தருளே.

இ - ள். குளிர்ச்சியையுடைய மலர் முருக்கவிழப்பட்ட குழலையுடையாய்! மேகம்போற்கொடுக்குந் தொழில்பழகிய சந்திரவாணனுடைய தமிழ் விளங்கப்பட்ட தஞ்சையான் அன்புபோல்குளிர்ந்த இளமரச்சோலையும் அவனது புகழினொளியைப்போல வெண்மணல் செறிந்தகான்யாறும் கண்டுமகிழ்ந்து மெல்ல மெல்ல நடந்தருள்வாயாக. எ - று.

தளி-மேகம். பயிலுதல்-பழகுதல். அளி-அன்பு. கா-சோலை. ஆறு-கான்யாறு. உவத்தல்-மகிழ்தல். களி-குளிர்ச்சி. 'கண்டுவந்து' எனஇயையும்.

தலைமகன் றலைமகளசைவறிந்திருத்தல்.

(இது வெளிப்படை.)

அசைவு-வருத்தம். அன்புகொண்டமடப்பெடையசைஇயவருத்தத்தை என்றார் பிறரும். அசைஇய-வருந்திய.

வரமாமை வேற்படை வாணன் றென்மாறை வணங்கலர்கள்
புரமான வல்லழல் பொங்குவெங் கானிற் பொருந்தியகூர்
அரமான கல்லுன் னடிமல ராற்றல வாதலினும்
சுரமாறு மெல்லைநல் லாயிருப் பாமிந்தச் சோலையிலே.

இ - ள். நல்லாய்! வரத்தையுடைய மாமைநிறம்பொருந்திய வேற்படையையுடைய வாணன்தென்மாறையை வணங்காதார் நகரைப்போலவலிய அழல்பொங்கியெழும் வெய்யக்காட்டில்கூர்பொருந்திய அரத்துக்கொப்பானகற்கள் உன் அடிமலர் பொறுக்குந்தன்மையவல்ல; ஆதலாற்சுரமாறுமளவும் நாம் இந்தச்சோலையிலே யிருப்பாம். எ - று.

மாமை குருதிப்புள்ளிநிறம். 'வரமாமைவேற்படை வாணன்' என்று பாடமோதிப், பெருமையுங் கூர்மையுமுடைய வேற்படையெனப்பொருள் கூறுக. 'கூர்பொருந்திய' எனவிலையும். அரமானவன்புழிஉவமைத்தொகை, புரமான, புரம்போல. ஆற்றல் - பொறுத்தல். † 'ஆற்றுவாராற்றல் பசியாற்றல்' என்றார்பிறரும்.

சுரம்-வழி. ஆறுதல் - வெப்பந்தணிதல். எல்லை அளவு. (௯௧௫)

உவந்தலர்சூட்டியுண்மகிழ்ந்துரைத்தல்.

உவந்தலர் சூட்டி யுண்மகிழ்ந்துரைத்தல் எ - து. தலைமகளை மகிழ்ந்து அவள்கூந்தற்கு அலரைச்சூட்டி அதனால் பரவசமகிழ்ச்சியடைந்து கூறுதல். உவகை அறிவொடுகூடியது, மகிழ்ச்சி யறிவழிந்தது. என்னை, - ‡ "உள்ளக்களித்தலுங் காணமகிழ்தலுங், கள்ளுக்கில் காமத்திற்குண்டு." என்னுங் குறட்குப் பரிமேலழகர் உரையானுமுணர்க.

அடிமலர் போற்றவும் போற்றியன் பாலிவ ளாய்முடிக்கியான்
கடிமலர் சூட்டவுங் காட்டிய தாற்கள்வர் காய்ந்தெறியும்
துடிமலர் சீர்க்கெதிர் கூகை யிரட்டுஞ் சுரத்திடையோர்
வடிமலர் வேற்படை யான்வாணன் மாறையென் மாதவமே.

இ - ள். கள்வர் சினத்தடிக்குந் தடியின்கண் விரிவாகிய தாளவோசைக்கு எதிராகக் கூகையொலிக்குங் காட்டிடை ஒப்பற்ற கூர்மை விரிந்த வேற்படையுடையவாணன் தென்மாறைநாட்டிலிருக்கின்ற என்னுடைய மாதவம் இவளடிமலரைப்போற்றவும் போற்றி அன்பால் இவளாய்ந்தமுடித்த கொண்டைக்கு யான் மணமலரைச்சூட்டவும் காட்டியது. எ - று.

கடிமலர்-மணமலர். காய்தல்-சினத்தல். எறிதல்-அடித்தல், துடி-பாலைநிலத்துப்பறை. மலர்தல்-விரிதல். சீர்-தாளவோசை. இரட்டுதல்-ஒலித்தல். சுரம்-காடு. வடி-வடித்தற்றொழில். (௯௧௬)

கண்டோரயிர்த்தல்.

கண்டோரயிர்த்தல் எ - து. வடிவின்மேம்பாட்டாற் கண்டோரைய முறக்கூறுதல்.

சையத் திரள்புயன் சந்திர வாணன் றனிபுரக்கும்
வையத் துறைகின்ற மானிட ரோவன்றி வானவரோ
மையப் படுமழல் வெஞ்சுரத் தூடுகடந் தவரென்
றையப் படுவதல் லாலுண் மைசால வறிவரிதே.

---

† திருக்குறள், சே. ௨௨௫.
‡ ஷை, சே. ௧௨௮௧.

இ - ள். வருகின்றோர் உளம்கையப் பாலை அழல்படும் வெய்ய சுரத்தில் நடக்க இவர் மலைபோல் திரண்ட புயத்தையுடையவனாகிய சந்திர வாணன் ஒப்பிலாது காத்தளிக்கும் புவியின்கண் உறைகின்றமானிடரோ! அல்லது வானுலகின்கணுள்ளவரோ! என்று ஐயப்படுவதல்லாமல் உண்மையை மிகவும் அறியவரிது. ஏ - று.

ஙைசயம் - மலை. திரள்புயம் - வினைத்தொகை. புரத்தல்-காத்தல். வையம் - புவி. 'அழல்படும்' என இயையும். சால-மிகவும். (௩௧௯)

கண்டோர்காதலின்விலக்கல்.

கண்டோர்காதலின் விலக்கல் எ - து. கண்டோர்காதலினால்போக்கை விலக்கி எம்பாடியிற் றங்கிப்போமென்று கூறுதல்.

கண்டோராவார் - பாலைநிலத் தெயிற்றியர். ஆடவர் கண்டோரெனில் வருங்குற்றமெனின், 'செவிலிகலந்துடன்வருவோர்க்கண்டு கேட்டல்' என்னுங் கிளவிச்செய்யுளில் யான்தலைவனைக் கண்டேனெனின் காதலி தலைவியைக் கண்டாள் என்பதனோடு மாறுபடுமென்றுணர்க.

மாலுந் திருவு மெனவரு வீர் தஞ்சை வாணன் றெவ்வூர்
போலுஞ் சுரமினிப் போகவொண் ணாது பொருப்படைந்தான்
ஆலும் புரவி யருக்கனிக் கங்கு லடற்கடமான்
பாலுந் தசையுமுண் டேதங்கு வீரெங்கள் பாடியிலே.

இ - ள். மாலுந்திருவுமென்று சொல்ல வருவீர்! தஞ்சைவாணன் பகைவரிருக்கும் ஊர்போலும் பாழாகிய சுரம் இன்று இவ்விடம் விட்டு அப்பாற்போகத்தகாது. ஆரவாரஞ்செய்யும் புரவி பூட்டிய தேரில்வரும் அருக்கன் அத்தவெற்படைந்தான். இருள்வருங்காலமாகிய இக்கங்குலில் போர்செய்யும் கடமான்பாலும் தசையும் யாங்கள் தருதும், அதனையுண்டு எங்கள்பாடியில் தங்குவீர். எ - று.

தெவ்வூர் பாழாய் மக்களியக்கமின்றியிருத்தலின் சுரம் உவமையாயிற்று. 'அருக்கன் பொருப்படைந்தான்' எனக் கூட்டுக. ஆலுதல்-ஆரவாரித்தல். அடல் - போர். (௩௨௦)

தன்பதியணிமைசாற்றல்.

தன்பதியணிமைசாற்றல் எ - து. இவ்விடத்தில் நம்மூரில் வைகிப் போதல்வேண்டுமென்று தலைவி கூறியவழித் தலைவன் தன்பதி அணித்தென்று கண்டோர் கூறுதல்.

தொடங்கும் பிறைநுதற் றோகையு நீயுமுன் றோன்றுகின்ற
கடங்குன் றிரண்டுங் கடந்துசென் றாற்கம லத்தடமும்
கிடங்கும் புரிசையுஞ் சூழ்ந்தெதிர் தோன்றுங் கிளைத்தபைந்தார்த்
தடங்குங் குமநெடுந் தோள்வாணன் மாறையுந் தஞ்சையுமே.

இ - ள். வளரஆரம்பிக்கும் பிறைபோலும் நுதலையுடைய தோகை போன்றவளும் நீயும் முன்னே தோன்றுகின்ற காடுஞ் சிறுமலையுமாகிய இரண்டும் கடந்து சென்றால் கமலப்பொய்கையும் கமுகும் புரிசையுஞ் சூழ்ந்து வாவியிற் கிளைத்த நீலத்தாரணிந்த பெருமையுடைய குங்குமம் பூசிய நெடியதோளையுடைய வாணன்மாறையும் தஞ்சையும் எதிராகத் தோன்றும். எ - று.

தொடங்குதல் - ஆரம்பித்தல். தோகை - ஆகுபெயர். கடம் - காடு. குன்று - சிறுமலை. கிடங்கு - அகழ். புரிசை - மதில். கிளைத்தல்-தோன்றுதல். 'கிளைத்த பைந்தார்' என்பது * "குண்டு சுனைபூத்தவண்டுபடுகண்ணி" என்றாற்போல ஒற்றுமை நயத்தாற் செய்யப்படு பொருண்மேல் நின்றது.()

தலைவன்றன்பதியடைந்தமைசாற்றல்.

தலைவன் தன்பதி யடைந்தமை சாற்றல் எ - து. தலைவன் தலைமகட்குத் தன்பதி யடைந்தமை யுணர்த்தல்.

சந்தனந் தோய்ந்து தயங்குமுத் தாரந் தரித்துவிம்மும்
[illegible]ந்தனந் தாங்கி நடுங்கிடை போல நடந்திங்ஙனே
நொந்தனங் காலென்று நோவல்பொன் னேயொரு நோயுமின்றி
வந்தனங் காணிது காண்வாணன் மாறை வளநகரே.

இ - ள். பொன்போன்றவளே! சந்தனந்தோய்ந்து விளங்கப்பட்ட முத்துமாலையணிந்து பூரிக்கும் நமது தனந்தாங்கி நடுங்குமிடைபோல நடந்த இவ்விடத்தில் கால்நொந்தனமென்று நோவற்க; ஒருதுன்பமுமின்றி வந்தனம், வாணன் மாறை வளநகரிது காண்பாய். எ - று.

தான்நீஅவனென்னும் வேற்றுமையின்மையான் வந்தனம் என்றுகூறினானென்க. பொன் - ஆகுபெயர். நோய்-துன்பம். 'வந்தனங்காண்' என்புழி காண் உரையசை.

* இவற்றுள் பாங்கி 'தலைவற்குடன் போக்குணர்த்தலும்,' 'தலைவிக்குடன் போக்குணர்த்தலும்' ஆகிய இரண்டும் போக்கறிவுறுத்தல். 'தலைமகன் மறுத்தலும்,' 'தலைவி நாணழிந்திரங்கலும்' ஆகியஇரண்டும் போக்குடன் படாமை.

---

* திருமுருகாற்றுப்படை, குன்றுதோறாடல்.

'பாங்கி தலைவனை யுடன்படுத்தலும்,' 'தலைவி கற்பின்மேம்பாடு பூண்டலைப்பாங்கி புகறலும்' ஆகிய இரண்டும் போக்குடன்படுத்தல். 'தலைவன்போக்குடன்படுத்தலும்,' 'தலைவியொருப்பட்டெழுதலும்,' 'பாங்கிசுரத்தியல்புரைத்தழிச்சொல்லலும்' ஆகியமூன்றும்உடன்போக்குடன்படுதல். 'பாங்கிகையடைகொடுத்தலும்,' 'வைகிருள்விடுத்தலும்,' 'தலைமகன் தலைமகளைச் சுரத்துய்த்தலும்' ஆகிய மூன்றும் போக்கல். 'தலைவன் தலைவி அசைவறிந்திருத்தலும்,' 'கண்டோர்காதலின்விலக்கலும்' ஆகிய இரண்டும்விலக்கல். 'தலைவன் தலைவியையுவந்தலர்சூட்டியுண்மகிழ்ந்துரைத்தலும்,' 'கண்டோரயிர்த்தலும்' ஆகிய இரண்டும் புகழ்தல். 'கண்டோர்தன்பதியணிமைசாற்றலும்,' 'தலைவன் தன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தலும்' ஆகிய இரண்டும் தேற்றலெனக் கொள்க. (௩௨௨)

உடன்போக்கு முற்றிற்று.

கற்பொடுபுணர்ந்தகவ்வை.

கற்பொடு புணர்ந்தகவ்வை எ - து. தலைவி தலைவனுடைமையாய்க் கற்பொடுகூடிய வதனை அயலார் விராய சேரியர்பலருமறிதல்.

† "செவிலிபுலம்பல் நற்றாய்புலம்பல்
கவர்மனைமருட்சி கண்டோரிரக்கம்
செவிலிபின்றேடிச் சேறலென்றாங்குக்
கற்பொடுபுணர்ந்த கவ்வையைவகைத்தே." — என்னுஞ் சூத்திரவிதியால் கற்பொடு புணர்ந்த கவ்வை ஐவகைப்படும்.

செவிலிபாங்கியைவினாதல்.

(இது வெளிப்படை.)

நலம்புனை யாயமு நீபுநற் றாயொடு நானுநன்பொன்
சிலம்புயர் சோலையுஞ் சிற்றிலும் பேரிலுந் தெண்டிரைமேல்
வலம்புரி யூர்வயல் சூழ்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
புலம்புற மாதரெங் கேமக ளேதனிப் போயினளே.

இ - ள். நலம்புனைந்த ஆயமும் நீயும் நற்றாயொடு நானும் நல்லஅழகிய மலையிடத்து உயர்ந்தசோலையும் அவள் விளையாடுஞ் சிற்றிலும் அவளியங்கித்திரியும்பெரியமனையும் தெளிந்ததிரையின்மேல்வலம்புரிச்சங்குஊர்ந்துவரும் வயல்சூழ்ந்த தஞ்சைவாணனைவாழ்த்தாதபகைவர்போலப் புலம்புதலடைய மாதர். எங்கே தனியாய்ப்போயினாள்? யான் அறியச்சொல்லாயாக. எ - று.

நலம்புனையாயம்—தலைவிக்கழகாயலங்கரிக்கும் ஆயம். ஒடு-எண்ணொடு.

---

† அகப்பொருள் விளக்கம், வரைவியல், சூ. ௧௱.

பாங்கிசெவிலிக்குணர்த்தல்.

(இது வெளிப்படை.)

வெறுத்தா ரொறுத்துரை மேலுநங் கேளிர் விழைதலின்றி
மறுத்தா ரவற்கு மணமத னாற்றஞ்சை வாணர்பிரான்
கறுத்தார் புரத்து நடந்தனள் காளைபின் காமர்கற்பால்
பொறுத்தா ளழற்சுரந் தன்னையன் னாய்நின் பொலங்கொடியே.

இ - ள். அன்னாய்! நின்பொலங்கொடி நஞ்சுற்றத்தார் வெறுத்தார்; அதன்றியும், ஒறுத்த சொல்லைச் சொல்லுதல் மேலும் வளைதலின்றி அத்தலைவற்குமணத்தைமறுத்தார்; அதனால் தஞ்சைவாணர் குலத்துக்குப்பிரான் கோபித்த பகைவரூராகியகாட்டில் காளைபின் நடந்தனள்; அழகியகற்பினால் சுரத்தழல் அன்னை பொறுத்தாள். எ - று.

ஒறுத்துரை-சினத்துப் பல்காற் கூறுதல். விளைதல் - விருப்பம். கறுத்தல்-கோபித்தல். காளை-பாலைநிலத்துத் தலைவன். காமர்-அழகு. 'மணத்தை மறுத்தார்' எனவும், 'சுரத்தழறன்னை' எனவும் இயையும். (௯௨௪)

பாங்கியினுணர்ந்தசெவிலி தேற்றுவோர்க்கெதிரழிந்து கூறல்.

(இது வெளிப்படை.)

அழிந்து கூறல் - நொந்து கூறல்.

மாறு வளவயல் சூழ்தஞ்சை வாணன்றென் மாறையென்கண்
ஆறு வருந்துய ராற்றுகின் றீரறி வைகொளுத்தி
ஊறு வனகடிந் தென்முலை யூறமிர் தூட்டியின்சொல்
கூறு வளர்த்ததற் கோவென்னை நீத்ததென் கோல்வளையே.

இ - ள். வளமாறாத வயல் சூழ்ந்த தஞ்சைவாணன் தென்மாறையில் என்னிடத்தில் ஆறாதஅருந்துயரையாற்றுகின்றவரோ! அறிவைப்பொருந்தித் துன்பமாவன கடிந்து என்முலையிலூறும் அமிழ்தத்தை யூட்டி இனியசொல்லைக்கூறி அரிதாய் வளர்த்ததற்கோ என்னழகிய வளையையுடையாள் என்னை விட்டுநீங்கியது! எ - று.

'வளமாறு' எனஇயையும். ஏகாரம்-ஈற்றசை. கொளுத்தல்-பொருந்தல், ஊறு-துன்பம். கூறு-கூறி. நீத்தல் - துறத்தல். கோல்வளை - ஆகுபெயர். கோலம்-அழகு, கோல் எனக்கடைக்குறை. கோல்வளையிற் புள்ளியென் பாருமுளர். (௯௨௫)

செவிலிதன்னறிவின்மைதன்னைநொந்துரைத்தல்.

செவிலி தன்னறிவின்மை தன்னை நொந்துரைத்தல் எ - து. தலைவி போதற்குத் தன்குறிப்பினால் அறிவித்ததன்மையை யறிந்திலே னென்று தன்னறிவின்மை தன்னைத்தெளிந்துகூறல்.

வழியா வரும்பெரு நீர்த்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
கழியாத வன்புடைக் காளைபின் னாளைக் கலந்துகொண்டல்
பொழியாத வெஞ்சுரம் போகுவல் யானென்று போங்குறிப்பால்
ஒழியாதென் முன்புசொன் னாள்பேதை யேனொன்றை யோர்ந்தில
[னே.

இ - ள். வாய்க்கால் நிறைந்து வழிந்துவரும் பெரிய நீர் சூழ்ந்த தஞ்சைவாணனை வாழ்த்தாத பகைவர் போல நீங்காத அன்பையுடைய காளை பின்னே நாளைகலந்து ஒருக்காலும் கார்வந்து பெய்யாத வெவ்வியகாட்டில் யான்போகுவலென்று போங்குறிப்பையெல்லாம் விடாது என்முன்பு சொன்னாள்; யானறிவிலேன் ஆதலால், ஒன்றையும் ஆராய்ந்தறிந்திலேன். எ - று.

வழியா - வழிந்து. கழியாத - நீங்காத. ஒழியாது - விடாது. ஆல் - அசை. ஒன்றையும் என்புழி சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. (௯௨௬)

செவிலிதெய்வம்வாழ்த்தல்.

(இது வெளிப்படை.)

இணங்கிப் புவனத் தெவருமில் லாவென் னிளங்கொடியால்
உணங்கிக் கழித லொழியவென் பால்வர வுன்னையன்பால்
வணங்கிப் பலமுறை வாழ்த்துகின் றேன்றஞ்சை வாணன்றெவ்வை
அணங்கித் திரள்புயத் தான்மல யாசலத் தாரணங்கே.

இ - ள். பகைவரை வருத்திய வதனாற் பூரித்துத் திரண்டபுயத்தையுடையவனாகிய தஞ்சைவாணனது பொதிய மலையிலிருக்கின்ற அரியதெய்வமே! இப்புவனத்து ஒட்டுக்கூடுதற்கு எவரும் இல்லாத என்னிளங்கொடி போல்வாள் வாடிப் பாலைவனத்துப் போதலையொழிய என்னிடத்துவர உன்னை அன்பால் பலமுறை வணங்கித்துதிக்கின்றேன்; வரின் நினக்குச் சிறப்புச்செய்வேன்.

இணங்கல் - இணங்கெனத்திரிந்துநின்றது, *"காப்பினொப்பி னூர்தியி னிழையின்" என்னும் வேற்றுமையியற் சூத்திரத்தின் இழைத்தல் என்னும் சொல் இழை என நின்றாற்போலக் கொள்க. உணங்கி - வாடி. கழிதல் - போதல். அணங்கி - வருத்தி. மலையாசலம் - பொதியமலை. ஆரணங்கு - அரிய தெய்வம். 'வரின்நினக்குச் சிறப்புச்செய்வேன்' என்பது அவாய்நிலையான் வந்தது. இவை மூன்றுகிளவியும் செவிலிபுலம்பற்குரியவாமென்க. (௯௨௭)

---

* தொல். சொல். வேற்றுமையியல், சூ. ௭௨.

செவிலிநற்றாய்க்கறத்தொடுநிற்றல்.

செவிலிநற்றாய்க் கறத்தொடுநிற்றலாவது - செவிலி நற்றாய்க்கு உடன் போக்கை வெளிப்படுத்திக் கூறல்.

சகநல்க வந்தருள் சந்திர வாணன்றென் றஞ்சைநல்லாய்
முகநல்கி நல்க முலைகொடுத் தாரின்முத் தங்கொடுத்தார்
மிகநல்ல ரென்பது மன்பதை தேர விடலையின்னே
மகநல்கு மந்தியங் கானடக் தாளுன் மடக்தையின்றே.

இ - ள். உலகத்தில் மகிழ்ச்சி கொடுக்கவந்தருளப்பட்ட சந்திர வாணனது அழகியதஞ்சையிலிருக்கின்ற நல்லாய்! முகங்கொடுத்து மேலைக்கு மகிழ்ச்சியள் கொடுக்கவெண்ணி முலைகொடுத்தாரின் இன் முத்தங் கொடுத்த கணவரே மிகநல்லரென்பது உலகத்து மக்களெல்லாந் தெளிய உன்மடந்தைஇன்று மகப்பெறுமந்திகள்இயங்கும் காட்டில்விடலையின்னே நடந்தாள். எ - று.

சகம் என்புழி ஏழனுருபுதொக்கது. நல்லாய் - நற்றாய். மன்பதை-மக்கட்கூட்டம். தேற-தெளிய. மக - குரங்குக்குட்டி. ‡ "கோவோழ்குரங்குங் குட்டி கூறுப." ‡ "மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்புமவையுமன்னவப் பாலன." என்பதனுனுணர்க. மந்தி-பெண்குரங்கு. ‡ 'குரங்கு முசுவு மூகமு மூன்றும்" என்பதனுனுணர்க. கான்-காடு. (கூஉஅ)

நற்றாய்பாங்கியோடுபுலம்பல்.

(இது வெளிப்படை,)

முன்னே யிதனை மொழிந்தனை யேனுந்தை முந்தைமணம்
பின்னேய் குழலி பெறுளல்ல ளேபிறழா தெவர்க்குந்
தன்னேயம் வைத்தரு ளுந்தஞ்சை வாணன் றமிழ்ச்சிலம்பில்
பொன்னே யனையநல் லாயவ மேசுரம் போக்கினையே.

இ - ள். எவர்க்கும் நிலைவிட்டுப் பெயராத தன்னுடைய அன்பை வைத்துக்காக்கும் தஞ்சைவாணன் பொதியமலையிடத்துப் பாற்கடற்பிறந்த மடவார் பலருள்ளும் திருமகளே யொப்பாகிய நல்லாய்! சுரம்போவதற்கு முன்னமே இதனைமொழிந்தனையாகின் நுந்தந்தை முற்காலத்தில் என்னை மணஞ்செய்தது போலப் பின்னுதல் பொருந்திய குழலையுடையாள் மணம் பெறுவாளே! இச்செய்தியை என்னுடன் சொல்லாமல் மகளை வீணேசுரத்திற்போக்கினையே! எ - று.

---

‡ தொல். பொருள். மரபியல், சூ. கந, கச, உஉ.

நந்தை - நுந்தந்தை. முந்தை-முன்பு. மணம் என்புழி உவமத்தொகை. பிறழ்தல்-பெயர்தல். நேயம்-அன்பு. போனேனே என்புழி ஏகாரம் பிரிநிலை; அவளுடன் பிறந்தார் பலருள்ளும் அவளையே பிரித்து வாங்குதலின். அவம்-வீண். சுரம்-கான். (௯௨௯)

அது கேட்டபாங்கியழுங்கல்கண்டு நற்றாய்புலம்பல்.

(இது வெளிப்படை.)

இல்லுங் கழங்கா டிடங்களு நோக்கி யிரங்கல்வம்பும்
வல்லும்பொருங்கொங்கை மங்கைநல் லாய்தஞ்சைவாணனென்னார்
புல்லுந் துணைவியர் போல்வினை யேன்பெற்ற பூவையன்னாள்
செல்லுஞ் சுரத்தழ லன்றுன்கண் ணீரொற் றெறுகின்றதே.

இ - ள். கச்சும் சூதும் தம்முட்பொருங் கொங்கையையுடைய மங்கை நல்லாய்! தஞ்சைவாணனுக்குப் பகையாயினோர்கூடும் மனைவியர்போலத் தீவினைசெய்தயான் பெற்றபூவைபோன்ற மகள் வருந்திச்செல்லும்பாலைச் சுரத்தில் விழுந்திருக்கும் அழலன்று, அழுகின்ற கண்ணீரோ யென்னைச்சுடுகின்றது; மகள் இயங்கித்திரிகின்ற மனையையும் அவள் கழங்காடுகின்ற இடங்களையும் நோக்கி நீ கலுழற்க. எ - று.

கழங்காடுதல்-கழங்காயேழு கைப்பிடித்தாடுதல். இரங்கல்-அழுதல். வம்பு-கச்சு. வல்லு-சூது. வம்பும் வல்லும் பொருதல்-வல்லொப்புப் பார்க்க வருங்கால் வம்பே மறையற்க என்புழி நீ யொப்பாகாயென்று வம்புவிலக்குழி ஒன்றோடொன்று பொருதலாயிற்று. தெறுதல்-சுடுதல். (௯௩௦)

நற்றாய்பாங்கியரோடுபுலம்பல்.

(இது வெளிப்படை.)

நேயம் புணைதுணை யாகவெங் கானக நீந்தலெண்ணி
ஆயம் புலம்ப வகன்றன ளோகல் லகங்குழைய
மாயம் புகலொரு காளைபின் வாணன்றென் மாறையன்னீர்
சேயம் புயமலர் போலடி நோவவென் சில்வளையே.

இ - ள். வாணன் தென்மாறை நாடுபோன்ற பெண்காள்! கல்லும் நெஞ்சங்குழையப் பொய்சொல்லப்பட்ட வொருகாளைபின் எனது சில்வளையையுடையாள் சிவந்த தாமரைமலரையொக்கும் அடிகள்நோவ வெவ்விய காடாகிய வெள்ளத்தைநீந்தவெண்ணி அன்பினைத் தெப்பமுந் துணையுமாக ஆயக்கூட்டம் புலம்பப்பிரிந்து போயினாள். எ - று.

நேயம்-அன்பு. புணை துணை என்புழி உம்மைத்தொகை. நீந்தல் என்பதனால் வெள்ளம் வருவிக்கப்பட்டது. ஏகாரம் ஈற்றசை. கல் என்புழி சிறப்பும்மை தொக்குகின்றது. "குன்றி-நெஞ்சபகவெறிந்த வெஞ்சுடர் நெடுவேல்" என்பதுபோலக்கற்கு நெஞ்சுகூறினுமொன்றுணர்க. மாயம்-பொய். அம்புயம்-தாமரை. சில்வளை - ஆகுபெயர். (௯௩௧)

நற்றாய் அயலார் தம்மொடு புலம்பல்.

(இதுவெளிப்படை)

மேனாள் வரங்கிடந் தென்போல் வருந்தி மிகவுமெய்நொந்
தீனா தவர்துன்ப மெய்துவ ரோவிமை யோருலகந்
தானாண நீடு மதிற்றஞ்சை வாணன் றமிழ்ச்சிலம்பின்
மானார் விழியனை யாள்விளை யாடிய வண்டல்கண்டே.

இ - ள். தேவருலகத்தார்நாண நீண்ட மதில்சூழ்ந்த தஞ்சைவாணன் தமிழ்ச்சிலம்பில் விழிமான்போன்றவள் விளையாடிய வண்டலம்பாவையைக்கண்டு பண்டைநாளில் வரங்கிடந்து என்னைப்போற் பத்துமாதஞ் சுமந்து வருந்தி மிகவும் மெய் நொந்து பெறாதார் துன்பம் எய்துவரோ? யானும் பெறாதிராதுபெற்றுத் துன்பத்தை யெய்தினேன். எ - று.

மேனாள் - பண்டைநாள். ஈனாதவர் - பெறாதவர். வண்டல் - ஆகுபெயர். (௫௫௨)

நற்றாய்த்தலைமகள்பயிலிடம்தம்மொடுபுலம்பல்.

நற்றாய்த் தலைமகள் பயிலிடம் தம்மொடு புலம்பல் எ - து. நற்றாய் தலைவிபழகி விளையாடுமிடங்களோடு நொந்துகூறல்.

செயலைத் தருவின் வருநிழ லேபெருஞ் சிற்றில்லமே
வயலைக் கொடிநொச்சி மண்டப மேதஞ்சை வாணனென்னார்
இயலைத் தனித்தனி தந்தன ளோநமக் கின்றிதன்றோ
கயலைப் பொருதகண் ணாண்மேலும் வாழ்விக்குங் கட்டளையே.

இ - ள். அசோகத்தருவின் அழகிய நிழலே! பெரிதாய்வளைத்த சிற்றில்லமே! வெளியிலே செய்த கொடிகட்டிய மதில் சேர்ந்த மண்டபமே! தஞ்சைவாணனுக்குப் பகைவரிலக்கணத்தை நமக்கின்று தனித்தனி தந்தாள் கயலுடனே போர்புரிந்தகண்ணாள்; இனிமேலும் நம்மை வாழ்விக்கும் கட்டளையிதுவன்றோ! எ - று.

செயலை-அசோகு. திரு-அழகு. பெருஞ்சிற்றில்-அவரவர் விளையாடுஞ் சிற்றில் அறம் பெரிதாய் வளைந்தசிற்றில். வயலை-வெளி. நொச்சி - மதில். 'தனித்தனிதருதல்' பகைவர் பலராதலால் அவரவர்படுந்துன்பங்களை வேறு வேறு கொடுத்தல். மேலும்-இனிமேலும். கட்டளை - முறைமை. இவை ஐந்தும் நற்றாய் புலம்பற்குரியவாமென்க, (௫௫௩)

நிமித்தம்போற்றல்.

வடியேய் புகர்முக வாள்வல் லாணன்றென் மாறையுள்யான்
அடியே தொழுந்தெய்வ மாகநிற் பேணி யரும்பலியிப்
படியே தருகுவ லென்றுமின் னேயிப் பதியுவகைக்
கொடியே வரக்கரை நீகொடி யேன்பெற்ற கொம்பினையே.

இ - ள். இப்பதியிடத்து மகிழ்ச்சிகொண்டிருக்கின்ற காகமே! பாவியாகிய யான்பெற்ற கொம்புபோல்வாளை ஈண்டுவர நீயழையாய், அழைத்தவுடனே வருவள், அவள்வந்தால் வடித்ததொழில்பொருந்திய புகர்நிறத்தை முகத்திலுடைய வாட்டொழிலில்வல்ல வாணனது தென்மாறையுள் யான் வழிபடுகடவுளாக நின்னைப்போற்றி, சோறுதசைமுதலிய அரியபலியை இன்று கொடுத்தாற்போல் என்றுந் தருவேன் எ - று.

வடி - வடித்ததொழில். புகர் - இரத்தக்கறைப்புள்ளி. அடிதொழுந் தெய்வம் - வழிபடுகடவுள். பேணி - போற்றி. அரியபலி - கிடையாதபலி. இன்னே-இப்போதே. கொடி-காகம். கரைதல்-அழைத்தல். காகமழைத்தல் ஊர்க்குப் போயினர் வருவரென்னும் உலகியல்புபற்றிக் கூறினளென்றுணர்க. இன்னேவரவென இயையும். (௩௩௪)

சுரந்தணிவித்தல்.

சுரந்தணிவித்தல் எ - து. சுரத்தின்வெம்மை குளிருமாறுகூறுதல்.

வெஞ்சுர நாடு வியன்சுர லோகமும் வெங்கடுங்கான்
ஐஞ்சுர தாரு வனங்களு மாக வகிற்புகைபோல்
மஞ்சுர வாடக மாமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
பஞ்சுர மாகு மொழிச்சுரு ளோதியென் பைந்தொடிக்கே.

இ - ள். அந்நகரிலுள்ளார் குழற்கூட்டும் அகிற்புகைபோன்ற முகில் தவழப்பட்ட வலியபொன்மதில்சூழ்ந்த தஞ்சைவாணனது வெற்பிடத்துப் பஞ்சுரமென்னும் பண்ணுக்கொப்பாகிய மொழியையும், சுருண்ட குழலையுமுடைய என்பசிய தொடியையணிந்தாட்கு வெய்யபாலையுலகும், விரிவாகிய தேவருலகும், வெய்யகடியகாடும், அத்தேவருலகிலுண்டாகிய பஞ்சதருச்சோலையுமாக. எ - று.

சுரநாடு-பாலையுலகம். வியன்-விரிவு. ஐந்துசுரதருவாவன - சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம். பஞ்சுரம் - பாலைநிலத்துப் பண். ஓதி-குழல். மொழிச்சுருளோதி - உம்மைத்தொகை. பைந்தொடி - அன்மொழித்தொகை. (௩௩௫)

தன்மகள்மென்மைத் தன்மைக்குஇரங்கல்

தன்மகள் மென்மைத்தன்மைக்குஇரங்கல் எ - து. நற்றாய் தன்மகள் மெல்லிய இயல்பாகிய தன்மைக்கு இரங்கல்.

தாமே தமக்கொப்பு மற்றில் லவர்தில்லைத் தண்ணனிச்சப்
பூமேன் மிதிக்கிற் பதைத்தடி பொங்குங் காமெரியுந்
தீமே லயில்போற் செறிபரற் கானிற் சிலம்படிப்பாய்
யாமே நடக்க வருவினை யேன்பெற்ற வம்மனைக்கே. (௫௫௬)

¶[இதுபிறசெய்யுட்கவி.]

இளமைத்தன்மைக்கு உளமெலிந்திரங்கல்.

இளமைத்தன்மைக்குளமெலிந்திரங்கல் எ - து. நற்றாய் தலைவியிளமைத்தன்மைக்கு மனமெலிந்திரங்கிக்கூறல்.

இரும்பா மனங்கொண்ட வாறென்னை நீதன்னை யேத்தியென்றும்
வரும்பா வலர்க்கருள் வாணன்றென் மாறை வளவயலில்
கரும்பார் மொழியா யழலென்று கண்ணீர் துடைத்தணைத்துன்
அரும்பா முலைசெய்ய வாய்ப்பசும் பாவைக் களிக்குமின்னே.

இ - ள். விளையாடும் பாவையை நோக்கித் தன்னைத்துதித்துவரும் புலவர்க்கு என்றும் அருளப்பட்ட தென்மாறை நாட்டுவளவயலில் வளருங் கரும்புபோன்ற மொழியினையுடையாய்! அழாதையென்றுகண்ணீர் துடைத்தணைத்து உன்மார்பில் அரும்பாதமுலையைச் செய்யவாயையுடைய பசும்பொன்னாற்செய்த பாவைக்களிக்கும் இளமைத் தன்மையையுடைய மின்போன்றவளே! என்னைவிட்டுப் பிரிந்துபோக நீ இரும்பையொக்கும் மனங்கொண்ட முறைமை எப்படி? எ - று.

பாவலர்-புலவர். பசும்பாவை என்றதனால் பொன்வருவிக்கப்பட்டது. மின் - ஆகுபெயர். (௫௫௭)

அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல்.

அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல் எ - து. நற்றாய்த்தலைவியது வெருவுந் தன்மையை நினைந்து தானச்சமுற்றிரங்குதல்.

கார்ண்மா தவிமலர் காழிருங் கூந்த னடங்கவழிக்
கோண்மா குமிறுங் கொடுங்குரல் கேட்டொறுங் கூர்ங்கணையால்
வீண்மா முனைவென்ற வாணன்றென் மாறை மணிவரைவேய்த்
தோண்மா வெருவுங் கொல்லோ வென்றெ னுருயிர் சோர்கின்றதே.

¶ திருக்கோவையார், சே. ௨௨௮.

இ - ள். குருக்கத்தியினது முருக்கவிழ் மலர்மணக்குங் கரியகூந்தலையுடையாள் நடந்த பாலைவழியில் கொலைசெய்யும் விலங்குகள் குமிறப்பட்ட கொடிய குரலைக்கேட்குந்தோறும் கூரிய கணையினால் வாள்பிடித்துவரும் பெரியபகையையென்றவாணன் தென்மாறைநாட்டிலிருக்கின்ற மணிவினையும் வளையிடத்தனவாகிய வேய்போலுந்தோளையுடைய திருப்போல்வாள் அஞ்சுமோ வென்று என்னுயிர்வாடுகின்றது. எ - று.

'மாதவிநாண்மலர்' எனஇயையும். மாதவி-குருக்கத்தி. கோள்-கொலை. மா-விலங்கு. குமிறுதல்-சினத்து முழங்குதல், கேட்குந்தோறும் என்னுஞ் சொல் கேட்டோறும்என விகாரப்பட்டுநின்றது. முனை-பகை. வெருவுதல்-அஞ்சுதல். சோர்தல்-வாடல்.

இவை ஐந்தும் மனமருட்சிக்குரியவாமாறு காண்க. (௩௩அ)

கண்டோரிரக்கம்.

இரங்கல்-அழுங்கல்.

நோக்துங் கலுழ்ந்துந் துணைவிய ராற்றலர் நோக்கொடின்சொல்
தந்துங் கவையுந் தணந்துசென் றுளெனத் தாள்பணியார்
மைந்துங் கதமுங் கடிந்தருள் வாணன்றென் மாறையன்னாள்
பந்துங் கழங்குமெல் லாங்கண்டு வாடும் பயந்தவளே.

இ - ள். தம்மிடத்துப்பார்க்குங் குளிர்ந்தபார்வையோடுஇனியசொல் தந்ததனையும் அயலார் தூற்றும் அலரையும்விட்டு நீக்கிச்சென்றுளௌ நொந்தும் கலுழ்ந்தும் துணைவியராற்றலர், தாள்பணியாதார் வலியையும் சினத்தையும்போக்கிய வாணன் தென்மாறையன்னாள் விளையாடிய பந்தும் கழங்கும் மற்றுமுள்ளனயாவையும் கண்டு பயந்த அவள்வாடும். எ - று.

கலுழ்தல்-அழுதல். 'நோக்கொடின்சொற்றந்ததற்குநொந்தும்கவையைத்தணந்ததற்குக் கலுழ்ந்து மாற்றலராயினார்' என நிரனிறையாய்ப் பொருள் கொள்க. தந்ததும் என்பது தந்தும் என விகாரப்பட்டு நின்றது. †பாலொடுதேன்கலந்தற்றே' என்புழி 'கலந்தற்றே' என்பது கலந்தற்றே என நின்றாற்போற்கொள்க. கவ்வை கவையென இடைக்குறை. தணந்து-விட்டுநீங்கி. மைந்து-வலி. கதம்-சினம். பயந்தவள்-ஈன்றாள். (௩௩௯)

இஃதொன்றும் கண்டோரிரங்கற்குரித்து; கண்டோர்-மாதரார் எனவுணர்க.

செவிலிஆற்றத்தாயைத்தேற்றல்.

செவிலிஆற்றாத்தாயைத்தேற்றல் எ - து. செவிலிஆற்றாத் நற்றாயைத் தேறுமாறு கூறுதல்.

---

† திருக்குறள், சே. ௧௨௧.

நன்றே யிதென்று முகமுக நோக்கி நகைநகையாம்
அன்றே யலர்சொல்லு மாதர்முன் னேதஞ்சை வாணன்றொல்சீர்
சென்றே பரந்த திசைகளெல் லாஞ்சென்று தேர்ந்தணங்கை
இன்றே தருவனன் னேவருந் தாதிங் கிருந்தருளே.

இ - ள். அன்னே! இவள் ஒருவன் பின்னே சுரம்போயின இது நன்றாயிருந்ததென்று ஒருவர்முகம்ஒருவர்நோக்கி நகையைநகைத்து வெளியிலே அலரைத்தூற்றும் மாதர்முன்னே, தஞ்சைவாணனது பழைய கீர்த்தி போய்ப்பரந்த திசைகளெல்லாம்போய்த்தேடி அணங்குபோல்வாளை இற்றைப்பொழுதேதருவேன்; யான் போய்வருமளவும் வருந்தாது இங்கிருந்தருள். எ - று.

முன் ஏகாரமூன்றும் ஈற்றசை, பின் ஏகாரம் ஒன்றுந் தேற்றம். 'நன்றேயிது' என்னுங் குறிப்புமொழி அசதிக்கண் தீதையுணர்த்திநின்றது. நகையா-நகைத்து. மன்று-வெளி, தேர்தல்-தேடல். அணங்கு-ஆகுபெயர். (௩௪௦)

ஆற்றிடைமுக்கோற்பகவரைவினாதல்.

ஆற்றிடைமுக்கோற்பகவரைவினாதல் எ - து. செவிலி தேடிப்போங்கால் வழியிடை எதிர்வரு முக்கோலுடைய அந்தணரை வினவுதல்.

ஒருவெண் குடையிரு நீழன்முக் கோல்கொண் டொழுக்கத்தினால்
அருவெங் களரியைந் தாறுசெல் வீரரு ளீரெழுபார்
மருவெண் டிசைபுகழ் வாணன்றென் மாறையென் வஞ்சியன்னாள்
பொருவெஞ் சுடரிலை வேலொரு காளைபின் போயினளே.

இ - ள். ஒருவெண்குடையினது பெரியநீழலிலே மூன்று தண்டு கொண்டு ஆசாரத்தினால் அரிய வெவ்விய களர்நிலத்திலியைந்து வழிச்செல்வீர்! எழுபாரிலும்மருவியஎண்டிசையிலுள்ளோராற்புகழப்பட்ட வாணனது தென்மாறைநாட்டிலிருக்கும் என்னுடைய வஞ்சிக்கொம்பு போன்றவள் போர்செய்யும் சுடர்பொருந்திய இலைபோலும் வேலையுடைய ஒருகாளை பின் போயினள்; மீண்டு வரக்கூறிஅருள்புரிவீராக. எ - று.

இருமை - பெருமை. முக்கோல் - திரிதண்டு. ஒழுக்கம் - ஆசாரம். இயைந்து-பொருந்தி. ஆறு-வழி. 'மீண்டுவரக்கூறல்' அவாய் நிலையான்வந்தது. ஒன்றுமுதலெட்டளவும் ஒழுங்காய்த்தொகை காட்டிவருதலால் செய்யுட்கு இஃதோரலங்காரந் தோன்றியவாறு காண்க. (௩௪௧)

மிக்கோரேதுக்காட்டல்.

மிக்கோரேதுக்காட்டல் எ - து. செவிலி வினவியதற்கு மிக்கோர் அது உலகவியல்பென்று காரணமெடுத்துக்காட்டல்.